# பாரதமணி

ஆசிரியர் :
கா. சி. வேங்கடரமணி

காரியாலயம் :
295, லிங்க செட்டி தெரு, மதராஸ்

வருஷ சந்தா ரூ. 4

| மாலை 4 | ஞாயிறு 2-6-40 விக்ரம வைகாசிமீ 20உ | முத்து 9 |
|---|---|---|

## பொருள் அடக்கம்

| விஷயம் | | பக்கம். |
|---|---|---|
| உலக வர்த்தமானம் ... ... ... ... | | 218 |
| தமிழ்நாட்டுச் செய்திகள் ... ... ... ... | | 220 |
| துப்பாக்கியும் வெண்ணெயும் ... ... ... | | 221 |
| பொருளாதார உலகம் ... ... ... ... | | 224 |
| இது தெரியுமா ? ... ... ... ... | | 225 |
| கிராம சேவை ... | ராவ் பகதூர் எம். ஆர். ராமஸ்வாமி சிவன் | 226 |
| துண்டு காகிதம் ... | டாக்டர் கே. ஆர். ஸ்ரீனிவாச அய்யங்கார் எம்.ஏ. | 228 |
| ஹார்மோனிய பஹிஷ்காரம் ... | ஏ. என். கல்யாணசுந்தரம் எம். ஏ. | 229 |
| பிரேமை ... ... ... | ஆர். ராமஸ்வாமி | 233 |
| வலையர் வாழ்வு ... ... ... | சீ. ராமஸ்வாமி | 234 |
| சிறுவர் பகுதி ... ... | பார்வதி சுப்ரமண்யம் | 236 |
| ஸ்வேதாரண்ய ஆசிரம பால பாடம் (2) ... .. | கா. சி. வேங்கடரமணி | 239 |
| புத்தக விமர்சனம் ... ... ... ... | | 240 |

"பாரத மணி" யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் குறிப்பிடும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள் ; ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.




# உலக வர்த்தமானம்

ஐரோப்பாவில் தற்சமயம் ஓர் பயங்கரமான யுத்தம் நடந்து வருகிறது. நேச தேசத்தினரின் நிலைமை மிகவும் கவலைக்கிடமாக இருக்கிறது என்று செய்திகள் கூறுகின்றன.

ஜெர்மனியின் முன்னேற்றம் மிகவும் தீவிரமாக இருக்கிறது. பிரஞ்சு எல்லையில் இருந்த அரணையும் தகர்த்து ஜெர்மன் சேனைகள் பிரான்ஸுக்குள் புகுந்து விட்டன. ஆராஸ் எமீன்ஸ் பிரதேசங்கள் எல்லாம் ஒவ்வொன்றாக எதிரிகளால் கைப்பற்றப் பட்டன. பெல்ஜியம் 18 நாட்கள் ஜெர்மனியுடன் கடும் போர் புரிந்து கடைசியில் தன் சக்திக்கு மிஞ்சிப்போரை நடத்த முடியாது என்று யுத்தத்தை நிறுத்தி விட்டது: "இனி ஜெர்மனியின் பெருஞ்சேனையுடன் யுத்தம் செய்தால் நம் தேசத்துக்கே அழிவு ஏற்படும்" என்று பெல்ஜிய மன்னர் போரை நிறுத்த விடுத்திருந்த பிரகடனத்தில் கூறினார்.

ஜெர்மன் ராஜீய அறிக்கையும் இதை ஊர்ஜிதப்படுத்துகிறது. பெல்ஜிய சேனை யுத்தம் செய்யவில்லை என்று தெரிவிக்கிறது.

பெல்ஜிய மன்னர் லீபோல்ட் நேச தேசத்தாருக்குச் சொல்லாமலே இத் தீர்மானத்தைச் செய்து விட்டார் என்று பிரெஞ்சு பிரதம மந்திரி குற்றஞ்சாட்டினார். பெல்ஜிய மன்னரின் எதிர் பாராத போக்கு நேசதேசத்தினர்களுக்கு மிகுந்த அதிருப்தி யளித்திருக்கிறது என்றும் தெரிகிறது. ஆனால் பெல்ஜிய மன்னர் பிரகடனத்துக்கு விரோதமாக அத்தேசத்து மந்திரி சபை வேலை செய்து வருகிறது. மந்திரி சபையைக் கேட்காமலேயே மன்னர் யுத்தத்தை நிறுத்தியது சட்ட விரோதமானது என்றும், பெல்ஜியம் நேச தேசத்தினருக்கு விரோதமாக யுத்தத்தை நிறுத்துவது பெரும் குற்றமாகும் என்றும் குறிப்பிட்டுக் காட்டிற்று. "தேசத்தின் போக்கைப்பொது மக்கள் தான் நிர்ணயிக்கவேண்டுமே யொழிய, மன்னர், பொறுப்பில்லாமல் செய்வது பிசகு" என்று பிரதம மந்திரி தன் ரேடியோ பிரஸங்கத்தில் கூறி இருக்கிறார். பெல்ஜியம் இன்னும் யுத்தம் செய்துக்கொண்டு இருக்கிறது என்று தெரிகிறது.

ஜெர்மனியோ பிரெஞ்சு எல்லைக்குள் உள்ள முக்கியமான துறைமுகங்களைத் தன் ஆதிக்கத்துக்குள்ளாக்கிக்கொண்டே பிரிட்டிஷ் கால்வாய்ப் பக்கமாக வெகு வேகமாக முன்னேறி வருகின்றது என்று தெரிகிறது.

வடக்கு பிரான்ஸில் மும்முரமான யுத்தம் நடக்கிறது என்று செய்திகள் கூறுகின்றன. சென்ற வார யுத்தத்தில் ஜெர்மன் நஷ்டம் கண்க்கிட முடியாதது என்றும் ஜெர்மானியர் பிணக் குவியல்கள் மேலே மேலும் மேலும் வந்து யுத்தம் செய்கிறார்கள் என்றும் செய்திகள் கூறுகின்றன.

பிரிட்டிஷ்-பிரெஞ்சு படைகள் நார்விக்கை திரும்பக் கைப்பற்றிவிட்டனவென்று கடைசியாக வந்த தந்தி கூறுகிறது.

"நிலைமை மிகவும் கவலைக்கிட்மானதாயினும், வெற்றி நமக்குத்தான். சமாளித் கொள்ளத் தகுந்த பலம் நமக்கு இருக்கிறது" என்று நேச தேசத்தினர் கூறுகின்றனர்.

ஆங்கிலோ—ரஷ்ய வியவகாரங்களைப் பற்றிப் பூர்வாங்கப் பேச்சு நடத்த ஸர் ஸ்டாப் போர்ட் க்ரிப்ஸ் மாஸ்கோவுக்குப் பறந்து சென்றார். ஆனால் அவர் போன்ற பிரத்யேக உத்யோகஸ்தருடன் விவகாரங்

களைப் பேச ரஷ்யா மறுத்துவிட்டது என்று தெரிகிறது.

அமெரிக்கா, மேலும் மேலும் நாஜி அட்டூழியங்கள் பெருகிக்கொண்டே வருவதை உணர்ந்து கொஞ்சம் கொஞ்சமாக ஜனநாயக நாடுகளுடன் சேர முன்வருகின்றது. நேச தேசத்தார்களுக்கு உதவ ஏராளமாக அமெரிக்கா விமானங்கள உற்பத்தி செய்யவேண்டும் என்று பிரெஸிடெண்ட் ரூஸ்வெல்ட் உத்தரவிட்டிருக்கிறார் என்றும் தெரிகிறது.

இத்தாலி சுவற்றின் மேல் இருக்கும் பூனைபோல் இருந்து வருகிறது. எந்த பக்கம் குதிக்கும் என்று கண்டு பிடிக்க முடியாததாக இருக்கிறது அத் தேசத்தின் நிலைமை. ஆனால் நேச நாடுகளுக்கு விரோதமாக பிரசாரம் மாத்திரம் நடந்து வருகின்றன என்று தெரிகிறது.

## இந்தியாவில்

ஜெர்மனி பிரெஞ்சு எல்லையில் முன்னேறுவதை இந்தியா கண் கொட்டாமல் தான் கவனித்து வருகிறது. நிமிஷத்துக்கு நிமிஷம் நிலைமை கவலைக்கிடமாவதை மிகவும் மன வருத்தத்துடன் பார்த்து வருகிறது. இந்தியா தன் பூரண பலத்தையும் அளித்து ஜன நாயகத்தைப் பாழும் நாஜிப்படை யெழுச்சியினின்றும் காக்க முன்வந்திருக்கிறது என்பது தலைவர்கள் ஒருவர்மாற்றி ஒருவர் விடுக்கும் அறிக்கையிலிருந்து நன்கு விளங்குகிறது. ஆனால், சுதந்திர இந்தியாதான் அவ்வித உதவியைத் தீரமாக அளிக்க முடியும் என்று தலைவர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள்.

ஸர்வாதிகாரிகளின் தினசரி அக்கிரமங்களைக் கண்டு ஒவ்வொரு தேசமும் தற்காப்புக்குப் பிரயத்தனம் செய்துவரும் சமயத்தில் இந்தியா மாத்திரம் ஏன் பரக்க விழித்துக்கொண்டிருக்க வேண்டும் என்று இந்திய மக்கள் கேட்கிறார்கள். இந்தியாவின் பாதுகாப்பு பலத்தை அதிகரிக்க பிரிட்டன் இதுவரையில் சிரத்தை எடுத்துக்கொள்ளாதது தவறு என்று எடுத்துக் காட்டி, இந்தியாவின் பாதுகாப்பு பலத்தை பெருக்க இனியாவது பிரிட்டன் தீவிரமாக முயற்சி செய்யவேண்டும் என்று ஸ்ரீ ஆர் தர்மூர் ஸ்டேட்ஸ்மன் பத்திரிகையில் எச்சரிக்கை செய்தார். இந்தியாவின் தற்காப்பு பலம் பிரிட்டனுக்கு ஆபத்துக் காலத்தில் பேருதவியாக இருக்கும் என்று விளக்கிக் காட்டினர்.

இதையனுசரித்து இந்திய சர்க்கார் பாதுகாப்புப் பலத்தைப் பெருக்க தீவிர முயற்சி எடுத்துக்கொண்டு வருகிறார்கள் என்று தெரிகிறது.

புதிய இந்தியா மந்திரி இந்தியாவின் அசைவற்ற அரசியல் நிலைமையைப் போக்க சிரத்தை எடுத்துக்கொள்வார் என்று எல்லோரும் எதிர்பார்த்திருந்தார்கள். ஆனால், அவர் சென்ற வாரத்தில் இந்தியா சம்பந்தமாக காமன்ஸில் வெளியிட்ட அபிப்பிராயங்களை இந்தியர்கள் திருப்தியுடன் வரவேற்கவில்லை. “இந்தியாவின் கோரிக்கைக்கு அவசியம் பிரிட்டிஷ் சர்க்கார் இணங்க வேண்டியதுதான். ஆனால் யுத்தம் முடிந்ததும் பேச்சு வார்த்தைகள் நடத்தி, இந்தியா தனக்கு வேண்டிய அரசியல் திட்ட அமைப்பைச் செய்து கொள்ளலாம்” என்று கூறினர். தற்காலிகமாக மாகாணங்களில் மந்திரிகள் பதவியை முன்போல் ஏற்று, யுத்தத்தில் பிரிட்டிஷ் சர்க்காருக்கு உதவி அளிக்க வேண்டும் என்ற கோரிக்கையை வெளியிட்டார்.

அமெரி புதியதாக ஒன்றும் கூறவில்லை என்றும், ஜெட்லண்டின் ஒற்றையடிப் பாதையிலேயே தான் செல்லுகிறார் என்றும் தலைவர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள்.

இதனிடையில் பஞ்சாப் பிரதம மந்திரி ஸர் ஸிக்கந்தர், இந்திய அரசியல் பிரச்னையைப்பற்றித் தெளிவாகப் பேசும்போது 31 அங்கத்தினர்கள் அடங்கிய அரசியல் நிர்ணய சபை ஒன்று கூட்ட வேண்டும் என்றும், அச் சபையில் எல்லா மாகாண பிரதம மந்திரிகளும் அங்கம் வகிக்கவேண்டும் என்றும் கூறினர். இச் சபை தயாரித்த அரசியல் திட்டத்தை பிரிட்டிஷ் சர்க்கார் ஒப்புக்கொள்ளவேண்டும் என்றும் கூறினர்.

மிதவாதிகளில் சிலர் இத் தீர்மானத்தை ஆதரித்தாலும் இது அவ்வளவாக சிறந்த

(அடுத்த பக்கம் பார்க்க)

# தமிழ் நாட்டுச் செய்திகள்

சிதம்பரம் தாலுக்கா அரசியல் மகாநாடு சென்ற மாதம் 23உ மாலை 6 மணிக்கு சிதம்பரத்திற்கு மேற்கே 18 மைல் தூரத்திலுள்ள குருங்குடி கிராமத்தில், ஸ்ரீ என். அண்ணாமலைப் பிள்ளை எம். எல். ஏ. யின் தலைமையில் நடைபெற்றது. கும்பகோணம் ஜனாப் எஸ். ஏ. ரஹீம் தேசீயக் கொடியை ஏற்றிவைத்தார். வடஆற்காடு ஜில்லாபோர்டு உபதலைவர் ஸ்ரீ. வி. எம். உபயதுல்லா சாயபு மகாநாட்டைத் திறந்துவைத்துப் பேசும்போது, காந்திஜிதான் இந்தியா பூராவுக்கும் பிரதிநிதியாகப் பேசத் தகுந்தவர் என்றும், அவர் தலைமையில் சுதந்திரம் அடைவது நிச்சயம் என்றும் கூறினார். தலைவர் ஸ்ரீ அண்ணாமலை பிள்ளை "பிரிட்டன் இச்சந்தர்ப்பத்தை நழுவவிடக்கூடாது. பிரிட்டன் காந்திஜியுடன் ஒருவித முடிவுக்கு வரவேண்டும். இல்லையேல், இந்தியாவில் சாமதானம் நிலைத்திருப்பது சந்தேகம்தான்" என்று கர்ஜித்தார்.

* * *

திருநெல்வேலி ஜில்லா அம்பா சமுத்திரத்தில், மாகாண 31-வது கல்வி மகாநாடு சென்ற மாதம் 27உ டாக்டர் ஏ. லக்ஷ்மணஸ்வாமி முதலியார் தலைமையில் நடைபெற்றது. தன் தலைமைப் பிரசங்கத்தில் முதலியார் தற்காலக் கல்வித் திட்டத்தில் உள்ள ஊழல்களை எடுத்துக் கூறி அவற்றைப் போக்க வேண்டிய சில கல்விமுறைச் சீர்திருத்தங்களையும் எடுத்துக் கூறினார். சிலவிடங்களில் உபாத்தியாயர்களின் இழிவான நிலைமையை உணர்ந்து "உபாத்திகளுக்கு உரிமை சாசனம் வேண்டும்" என்று கூறினார்.

* * *

காரைக்குடி நகர சத்தியாக்கிரக கமிட்டியின் சார்பில் ஸ்ரீ கிருஷ்ணா டாக்கீஸ் தியேட்டரில் சென்ற மே மாதம் 27உ பொதுக்கூட்டம் ஓர் நடந்தது. அதில் ராஜாஜி, டாக்டர் ராஜன், முதலியோர் பேசினார்கள். ராஜாஜி பேசுகையில் "நமது நோக்கம் சுயராஜ்யம் பெறுவதே தான்" என்று கூறினார். ஸத்யாக்ரகிகள் இந்த லக்ஷியத்தையடைய உயிரையும் தியாகம் செய்யத் தகுந்தவர்களாக இருக்கவேண்டும் என்று கூறினார்.

---

(முன்பக்கத் தொடர்ச்சி)

முறையாகக் கருதப்படவில்லை என்று தெரிகிறது.

வைஸ்ராய், இந்தியர்களுக்கு ரேடியோ மூலம் தற்கால அரசியல் நிலைமையைப் பற்றிப் பேசினார். அதில் இந்தியர்கள் தங்கள் பூரண ஆதரவையும் யுத்தத்தில் பிரிட்டிஷ் சர்க்காருக்கு அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். தகுந்த சந்தர்ப்பம் வந்த உடன் இந்தியத் தலைவர்கள் எல்லாரும் ஒன்றுகூடி அபிப்பிராய பேதமன்னியில் அரசியல் திட்டத்தை அமைக்க முன் வருவார்கள் என்று கூறினார்.

வைஸ்ராய் பிரசங்கத்திலிருந்து மறுபடியும் அவர் கொஞ்ச நாளுக்குள் அரசியல் நெருக்கடியைத் தீர்க்க பேசுவார் என்று தெரிகிறது. மொத்தத்தில் அரசியல் நெருக்கடியைத் தீர்க்க இனி தீவிர முயற்சி எடுத்துக்கொள்வார் என்று நம்பிக்கை பரவி வருகிறது. இது சம்பந்தமாக மாகாண கவர்னர்களும் வைஸ்ராயுடன் பேசப் போவதாகத் தெரிகிறது.

கவர்னரே 93-வது பிரிவின்படி சர்க்காரை நடத்தி வரும் மாகாணங்கள் ஒவ்வொன்றாக தங்கள் சட்டசபை அங்கத்தினர்கள் பெற்று வரும் சம்பளத்தை நிறுத்தத் தீர்மானித்தன. இது சட்டத்துக்கு முரணானது என்று ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார் கண்டித்து அறிக்கை விடுத்திருக்கிறார். இது சட்ட விரோதமானதால் கோர்ட்டில் வழக்குத் தொடரலாம் என்று ஸ்ரீ பிரகாசம் யோசனை கூறுகிறார்.

# துப்பாக்கியும் வெண்ணெயும்

[கா. சி. வேங்கடரமணி]

"இந்த இரண்டில் உனக்கென்னவேண்டும். துப்பாக்கியா? வெண்ணெயா?" என்று குழந்தைகளைக் கேட்டால் என்ன பதில் வருமென்று நாம் பார்ப்போம். சாதாரணமாக துப்பாக்கிதான் வேண்டுமென்று சொல்லுவார்கள். அதுவும் தீபாவளி சமயமாயிருந்தால் நிச்சயம் இந்த பதில்தான் கிடைக்கும்.

எல்லாவற்றையும் சொக்கப்பானையாய்க் கொளுத்தி, அழித்து, ஆனந்தத்தையடையும் நோக்கம்தான் நமது வாழ்வில் முன்னிட்டு நிற்கிறது. அதுவும் மேல் நாட்டு நாகரீகத்தில் கேட்கவேண்டுமா?

"துப்பாக்கியா, வெண்ணெயா?" என்கிற கேள்வி சாதாரணமாய் அதன் இயற்கை அர்த்தத்தில் கேட்கப்படவில்லை. இந்தக் கேள்வி உபமான உபமேய ருசியோடு கலந்து நிற்கிறது. ஜெர்மன் தேசத்து ராணுவப் படையில் தலைமை வகிக்கும் ஜெனரல் கோயரிங்கைக் கேட்டால், அவர் தங்கு தடையின்னியில் துப்பாக்கிதான் தன் தேசத்தின் முன்னேற்றத்திற்கு வேண்டுமென்று சொல்லுகிறார். இதற்குக் காரணமென்ன? அவர் கொள்கையின் ரகசியப் பொருளென்ன? எதை மூலாதாரமாக வைத்துக்கொண்டு இப்படிப் பேசுகிறார் என்று ஆராய்ச்சி செய்துப் பார்த்தால்தான் நமக்கு உண்மை வெளிப்படும்

உலகில் எல்லாவிதத்திற்கும் ஆதிமூலமாய் வழங்குவது நம்முடைய சாண் வயிறேதான். ஜெனரல் கொயரிங்குக்கும் முடிவில் வெண்ணெய்தான் வேண்டும். ஆனந்தமாய் தாட்டெலை போட்டு ஒரு மணி நேரம் சாப்பிடும் கோஷ்டியில் இவர் முதல் இடம் வகிக்கிறார். கும்பகர்ணன் போல் பெரிய சரீரத்தையுடையவர். வெண்ணெய், கொழுப்பை ஊட்டினால்தான் நெய்யிட்ட ஜ்வாலைபோல் அவர் போர்வீரம் பெருகும். ஆகையால் அவ்வருக்கும் வெண்ணெய்தான் பிரதானம். ஆனால் துப்பாக்கி தன் கைவசப்பட்டால்தான் சாண் வயிற்றுக்கு வேண்டிய வெண்ணெய், அதாவது நமது வாழ்விற்குத் தேவையான அன்ன ஆகாரங்கள் கஷ்டமன்னியில் கிடைக்கும் என்பது அவர் கொள்கை. சாரதிக்கு மூக்கணாங் கயிறு எப்படியோ அப்படியே அரசியல் பொருளாதார ஓட்டத்திற்குத் துப்பாக்கி. இந்த மனோ பாவத்தையும் இந்த கொள்கையின் உண்மையையும் நாம் ஆராய்ச்சி செய்து பார்ப்போம்.

எப்படி கூரான பற்களும் கொடூரமான நகங்களும் தனக்கு இல்லாவிட்டால் புலி கரடிகளுக்கு காட்டில் ஆகாரம் கிடைக்காதோ அப்படியே மேல் நாட்டு நாகரீகத்தின் அமைப்பில் பீரங்கி துப்பாக்கியன்னியில் உத்தம வாழ்வு இல்லை என்பது அவர்கள் நம்பிக்கை. புலியிடம் நாம் என்ன வேதாந்தம் பேசினாலும் அது இந்த பதில் தான் அளிக்கும். அப்படியே தற்கால ஜெர்மன் அரசியல் திட்டத்தில், புலிக்கு பற்கள் நகங்கள்போல், துப்பாக்கியும், பீரங்கியும், விமானப் படைகளும் அமைந்திருக்கின்றன. இந்த வேட்டை வெறியிலும் போட்டியிலும் ஆழ்ந்து நிற்கும் நாகரீகத்தை எப்படி சீர்திருத்தம் செய்கிறது. அளர் பிடித்த நிலத்தை உழுது, தேய்த்துக் குளிப்பாட்டி சாகுபடிக்குக் கொண்டு வருவது நெடுங்காலப் பாடுபோல் இதுவும் ஓர் கஷ்டமான காரியம். இருந்தாலும் முன்னேற்றமடைய வேண்டுமானால் பாடுபடத்தான் வேண்டும். துப்பாக்கியைப் பட்டமாகத் தரித்து நிற்கும் நாகரீகத்தை மாற்றி, சாந்தமும் சமாதானமும் உலவும் நாகரீகத்தைப் பூட்ட வழி என்ன, எப்படி செய்கிறது? துப்பா

* 20-5-40 அன்று சென்னை அகில இந்திய ரேடியோவில் பேசியது

க்கிப் பிரயோகத்தின் முடிவும் வெண்ணையை அடையத்தானே என்பதை புத்துயிர் அளிக்க விரும்பும் நாம் மறந்துவிடக் கூடாது. எந்த மூலகாரணத்தால் இந்த ஹிம்ஸை நமது வாழ்வில் ஊடுருவி நிற்கிறது என்பதையறியாமல் இந்த ஹிம்ஸையை எக்காலும் விலக்கமுடியாது.

மேல் நாட்டு ஜனநாயக அரசியல்கூட இந்த வியாதியால் கொஞ்ச காலமாய்ப் பிடிக்கப்பட்டு வருகிறது. ஏகாதிபத்திய அவாவுடன் கூடப் பிறந்த வியாதி இது. மேலுக்கு அதிகமாகத் தெரியவில்லையேயொழிய, ரத்த ஓட்டத்தில் இந்த ஹிம்ஸையின் கொடுமை கலந்து நிற்கிறது. ஐரோப்பாவின் சில பாகங்களில் சர்வாதிகாரிகள் பூரண அதிகாரம் செலுத்தி வரும் வரையில் மேல் நாட்டு ஜனநாயகத்தின் சட்ட திட்டங்களிலும் வாழ்விலும் இந்த விஷப்பூச்சி மேலிட்டுக் கொண்டே வரும். இந்த விஷப்பூச்சியின் பிடி நமது அரசியல் வாழ்வில் இருக்கும் வரையில் நாம் எவ்விதமாய்ப் பாடுபட்டாலும் வீண் பாடாகவே முடியும்.

ஆனால் தற்காலம், மேல் நாட்டில் மகா பாரத யுத்தம் கொடுமையாகப் பரவி வந்தாலும் ஜனநாயகம் முடிவில் வெற்றியடையும் என்னும் நம்பிக்கை எனக்குப் பூரணமா யிருக்கிறது. இந்தப் போர் வெற்றிக்குப் பின்வரும் சமாதான உடன்படிக்கைதான் உண்மையான வெற்றியாகும். அதை உண்மையான வெற்றியாக செய்ய வேண்டியதற்கு நாம் இப்பொழுதே வருங்கால யோசனை செய்து சட்ட திட்டங்கள் போட்டு வைக்கவேண்டும். போர் வெற்றியைக் காட்டிலும், இந்த சமாதான வெற்றி விஷயத்தில் உதவி செய்து ஒரு சனாதன சாந்த நிலைமையை உலகத்திற்கு அளித்து உதவி செய்ய இந்தியாவிற்குப் பலவித சௌகரியங்க ளிருக்கின்றன. இவைகளை பிரிட்டிஷ் ஜனநாயகம் பெற்று வெற்றியடையுமென்று எண்ணுகிறேன்.

இந்தப் போர் நிலைக்கும் துப்பாக்கி மனோபாவத்திற்கும் மூலகாரணம் என்னவென்று நான் முன் சொன்னதுபோல் பார்ப்போம். ரஷ்யாவை விலக்கி ஐரோப்பாவின் பொருளாதார நிலைமையைப் பார்த்தால், ஜனங்களுக்குத் தேவையான உணவுப்பொருள்களில் பாதிபாகங்கூட அங்கு உற்பத்தியாகிறதில்லை. இரண்டு பேரில் ஒருவருக்கு தங்கள் பிறந்தநாட்டில் அன்னம் கிடையாது. ஜன சங்கியையோ வருஷாவருஷம் பெருகிக்கொண்டு வருகிறது. ஆகையால் அன்னிய தேசத்தையும் கண்டத்தையும் அண்டித்தான் ஐரோப்பா பிழைக்கவேண்டி யிருக்கிறது. ஆப்பிரிக்கா, ஆசியா, முதற்கொண்ட பிரிவுகளை அடக்கி அடிமைப் படுத்தி தங்கள் உணவிற்கு வேண்டிய சட்டதிட்டங்களைப் போட்டு துப்பாக்கியின் பலத்தையண்டி ஆண்டு ஜீவிக்கவேண்டியாகிவிட்டது.

இந்த இயற்கையற்ற வாழ்வை அடியோடு மாற்ற வேண்டும். ஒருவன் வசிப்பது ஓர் இடம்; அவன் சுகவாழ்வுக்கு வேண்டிய உணவுப்பொருள்கள் விளைவது பத்தாயிரம் மைலுக்கப்புறம்! இதை மாற்றினாலொழிய சமாதானம் உலகில் நிலவ முடியாது. முப்பது வருஷத்திற்கொரு தரம் போராட்டந்தான்.

இப்படிப்பட்ட பொருளாதாரத் திட்டத்தைக் காப்பாற்றத்தான் ஜனநாயக அரசியல்கூட அடிமை வேலை செய்கிறது. ஒரு இடத்தில் வருஷா வருஷம் பெருகித் தேங்கி நிற்கும் ஜன சங்கியைக்கு ஒரு போக்கு. ஒரு வடிகால் காட்டவேண்டும். பொருளாதார வழியில் ஜன சமூகத்தின் பொது உழைப்பால் பெருகும் செல்வத்தையும், அதை ஒரு கையில் குமிக்கும் சட்டதிட்டங்களையும் ஓட்டத்தையும் மாற்றி பல பேருக்குப் பயன் படும்படியாகச் செய்யவேண்டும்.

காடுமண்டிய க்ரமம்பின் நிலையில்தான் உண்மையில் இப்பொழுதுமேல்நாட்டு நாகரீகம் இருக்கிறது. பூமி செழிப்புத்தான். மரங்கள் ஆகாயத்தை அளாவி நிற்கின்றன. ஆனால் இந்த பூமியைப் பயிர்செய்து சுகவாழ்க்கைக்கு உட்படுத்த வேண்டுமென்றால், நாம் இந்த மரங்களை வெட்டி விலக்கி, புதர்களை யழித்து, மேடு பள்ளங்களைக் கொத்தி நிரவி உழுது கரைபோட்டு பாடுபட வேண்டுமல்லவா? அப்படியே

இப்பொழுது ஐரோப்பாவில் செய்யவேண்டிய முறைகள் பல இருக்கின்றன. மேல் நாட்டு நாகரீகம் உலகமெங்கும் பரவிவருவதால் அதையே நாம் சாக்ஷியாக எடுத்துக் கொண்டு சோதித்துப் பார்க்கவேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

இந்த மனோபாவத்தையும் வேட்டை ஊக்கத்தையும், பிறரைச் சுரண்டி பிழைக்கும் எண்ணத்தையும், வழியையும், அடியோடு மாற்றி, ஒவ்வொரு மக்களின் மனதையும் வாழ்வையும் சாந்த உழவில் செலுத்தினால்தான் உலகத்தில் சாந்தம் நிலைநிற்கும். துப்பாக்கியில்லாமல் வெண்ணெய் கிடைக்கும். போர் இன்றி எல்லோரும் உண்டு பிழைக்கலாம். இல்லாவிட்டால் ராக்ஷஸப்போர் எங்கும் பரவி 'பிளாக் அவுட்', இருளில் காட்டு மனிதன் போல் நாம் ஜீவிக்க வேண்டும்.

அளர் பூமியை நாளுக்கு நாள் பாடுபட்டுச் சீர்திருத்துவதுபோல் இந்த மனோபாவத்தை நாம் தினசரி உழைத்துச் சீர்திருத்தம் செய்யவேண்டும். ஆனால் இப்படித் திருத்த சில அரசியல் வசதிகள் வேண்டும். எப்படி அளர் பூமியைத்திருத்த ஏராளமான ஜலவசதி—பாசன வடிகால் வசதி—வேண்டுமோ அப்படியே இதற்கும் அரசியல் பொருளாதார முறைகளில் சில அநுகூலமான சட்ட திட்டங்கள் வேண்டும். இல்லாவிட்டால் ஒரு நாளும் சீர்திருத்தம் செய்யமுடியாது. சில கொள்கைகள் கட்டுப்பாடுகள் இன்றியமையாதவை.

தற்கால நாகரீகமுறையில் இந்த அரசியல் திட்டத்தை ஒரு தேசம் மாத்திரம் போட்டு நிறைவேற்ற முடியாது. எல்லா ஜனங்களும் ஒன்றுகூடி "என் நாடு" "என் நாடு" என்று முள்வேலி போட்டு காவல் காத்துவரும் வேலிகளை அழித்து ஜன ஓட்டத்தைப் பெருக்கவேண்டும். சர்வதேச சங்கம் ஒன்று அரசியல் திட்டத்திற்கு ஏற்படாமல் சாந்தமான வாழ்வு நிலை நிற்காது. முக்கியமான உணவுகள் கூட விளையாத நாட்டில் சிக்கி செடுக்கிட்டுத் தேங்கி நிற்கும் ஜனக்கூட்டத்தைக் களைத்து உணவு விளையும் நாட்டிற்கு, உணவு அளவுக்குத் தக்கபடி திட்டம் போட்டு ஜன சமூகத்தை அனுப்பவேண்டும். விவசாயத்துக்கு விஷயம் தெரிந்த நீராணிக்கன்போல் ஜனப் பெருக்கின் போக்குக்கு சாஸ்திரீக சட்டதிட்டம் வேண்டும் (Scientific emigration).

முக்கியமான சில தொழில்களை சர்க்கார் ஆதிக்கத்துக் குட்படுத்தவேண்டும்—மின்சாரம்; இன்ஷ்யூரென்ஸ்; பாங்குத் தொழில், சினிமா; ரயில்வே, போஸ்ட் முதலியன—முக்கியமாய் ஒருவர் கையில் செல்வம் குவியும் குறைகளைத் தடுக்க வேண்டும். அப்படிக் குவிந்தாலும் அதை ஓர் ஏரியாக்கி அதிலிருந்து பாய் வாய்க்கால்கள் ஏற்படுத்தி, பிறருக்குப் பயன் படும்படி செய்யவேண்டும். இவைகளெல்லாம் பொருளாதார அரசியல் முறைகளில் சில. ஆனால் ஆற்றுக்குக் கரை போட்டால் தானாகவே வெள்ளம் வந்துவிடுமா? வெள்ளமல்லவோ பிரதானம். அந்த வெள்ளத்தை மானிட உள்ளத்தில் பெருக்கி மனிதனின் சுயநல (Predatory) மனோ பாவத்தை—இடி இடிக்கும் மேகத்தை மழையாக மாற்றுவதுபோல்—எப்படி மாற்றுவது என்பதுதான் கேள்வி. இதற்கு ஈசனருளைத்தான் நம் உழைப் போடு கலக்கவேண்டும். நாம் கைகூப்பி வணங்கி கும்பிட்டு ஒவ்வொருவரும் தன் ஸ்வதர்மத்தை நிஷ்காம்யமாய்ச் செய்து வந்தால் ஈசனருள் மாரி கால மழைபோல் தானாகவே பெருகும். இந்த மனோபாவத்தை நம்முடைய சிறுவர் சிறுமிகளுக்கு ஊட்டுவதற்கு வழி ஒன்றே ஒன்றுதான். கல்வி முறைத் திட்டத்தை இந்த நோக்கத்தை யனுசரித்து ஆரம்ப முதல் முடிவு வரையில் போடவேண்டியது அவசியம். கல்விமுறைத் திட்டத்தில் ஈசனருளைப் பெறவேண்டும். இல்லாவிட்டால் நமது நாகரீகம் எப்பொழுதும்போல் அஸ்திவாரமில்லாத அரண்மனைபோல் 30 வருஷத்துக் கொருதரம் இடிந்து விழுந்து கொண்டே இருக்கும். துப்பாக்கியையும் ஈட்டியையும் வேலி ஓரத்தில் எப்பொழுதும் நாட்டிவைத்து கண் கொட்டாத காவல் இருக்கும்படி நேரும். இதை ஒழிக்க நாம் இப்பொழுது இந்த மகாபாரத யுத்தத்திற்குப் பிறகாவது பாடுபடுவோமாக.




# ஏற்றுமதி வியாபாரம்

[லாலா ஸ்ரீராம், நியூ டில்லி]

இப்பொழுது யுத்தத்தி லீடுபட்டிருக்கும் நாடுகளால், இதற்கு முன் வியாபாரம் செய்த அளவிற்கு இப்பொழுது செய்ய முடியவில்லை. அதற்குக் காரணம் அவரவர்கள் தங்கள் யுத்த காரியங்களை கவனிப்பதால்தான்.

பிரிட்டிஷ் சர்க்கார் யுத்தத்தில் ஈடுபட்டிருந்தபோதிலும் தங்கள் வெளிநாட்டு வியாபாரத்தை அதிகரிக்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனர். வியாபார போர்டின் தலைவரான சர் ஆண்ரூ டங்கன், பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திலுள்ள கைத்தொழில்களின் பிரபல தலைவர்களைக் கூட்டி ஏற்றுமதி வியாபாரத்தை யுத்த காலத்தில் விருத்தி செய்வதுபற்றி யோசனை செய்ய ஏற்பாடு செய்திருக்கிறார்.

இந்தியா துரதிருஷ்டமாக, தன்னிடத்தில் வேண்டிய உற்பத்திப் பொருள்கள் இருந்தபோதிலும், தன்னுடைய கைத்தொழில் அபிவிருத்தி விஷயமாக எதுவும் செய்யவில்லை.

துணி உற்பத்தித் தொழில் மிகவும் அபிவிருத்தி யடைந்து, உள் நாட்டுத் தேவை போக, வெளி நாட்டு ஏற்றுமதிக்கும் வேண்டிய அளவு இந்தியாவில் உற்பத்தியாகின்றது. இப்பொழுது ஏற்பட்டிருக்கும் அரிய சந்தற்பத்தை உபயோகித்து நாம் முயற்சி செய்வோமானால் வெளி நாடுகளுக்கு நமது துணிகளை அனுப்ப ஏற்பாடு செய்யலாம். இப்பொழுதே அவ் விஷயமாக தனித் தனி முயற்சி செய்யப்பட்ட போதிலும், அதிவிருந்து நமக்கு விசேஷ அனுகூலமிருக்காது.

நாம் இப்பொழுது வெளி நாட்டு வியாபாரத்தை ஏற்பாடு செய்ய வேண்டும். மில்களின் முதலாளிகளின் உதவியைக் கொண்டு சர்க்காரே இவ் விஷயமாக முயற்சி எடுத்து இந்தியன் ஸ்டோர் இலாகாவைப் போல வெளி நாட்டு துணி மார்கடிங் இலாகா ஒன்றைச் சர்க்கார் ஏற்படுத்த வேண்டுமென்று விரும்புகிறேன். இவ் விலாகாவானது இவ்வொரு தொழிலைப்பற்றிதான் கவனிக்க வேண்டும். வெளி நாட்டிற்கு, டெக்ஸ்டைல் தொழிலில் அபிவிருத்தி யுள்ளவர்களை ஏஜன்டாக அனுப்பி அங்குள்ள வியாபார நிலைமைகளைக் கவனித்து நம் துணிகளுக்கு அங்கு தேவையை அதிகப்படுத்த வேண்டும்.

பிறகு இவ் விலாகாவானது நம் துணிகளின் மாதிரிகள் வெளி நாட்டிற்கு அனுப்பவும், அவ் விஷயமாக விசாரணைகளை, பம்பாய், அஹமதாபாத், கல்கத்தா, மதராஸ், இன்டோர், கான்பூர், டெல்லி முதலிய இடங்களில் விளம்பரப்படுத்தவும் வேண்டும். குறைந்த டென்டர்களிட மிருந்து சாமான்களை வாங்கவும், பிறகு அவைகளை வெளி நாட்டிற்கு ஏற்றுமதி செய்யவும் தங்கள் பொறுப்பிலேயே செய்ய வேண்டும். இவ்வாறு இவ் விலாகாவானது இவ்விஷயங்களை நேரிலேயே கவனிப்பதால் அனேக சௌகரியங்க ளிருக்கின்றன. மாதிரி கொடுத்த பிரகாரமே ஆர்டரும் அனுப்பப்படுகிறதா என்று கவனிக்கலாம். வெளி நாட்டில் இந்திய துணிகளின் மதிப்பையும், அந்த இந்திய வியாபாரத்தைப் பற்றி நல்லெண்ணமும் ஏற்படுத்தலாம். மேலும் விலை, டெலிவரி அனுப்பும் காலம், சாமானின் ரகம் முதலியவற்றைப் பற்றி வெளி நாட்டு வியாபாரிகளுக்கு இவ் விலாகா உத்தரவாதம் கொடுக்கலாம். இவ் விலாகாவின் நிர்வாகத்திற்காக டெக்ஸ்டைல் தொழிலில் கொஞ்சம் வரி வேண்டுமானால் விதிக்கலாம்.

இந்தியாவில் டெக்ஸ்டைல் தொழிலானது எல்லாவித விருப்பத்தையும் பூர்த்தி செய்யு மளவு அபிவிருத்தி யடைந்திருக்கிறதென்பதைப் பற்றிக் கூறவேண்டியதில்லை. ஆனால் தனித்தனி உற்பத்தியாளர்கள் வெளி நாட்டிலுள்ள வியாபாரிகளிடம் வியாபாரம் நடத்துவது சிரம சாத்தியம். இதற்காக வெளி நாட்டில் இவ் வியாபாரத்தை அதிகப்படுத்த வேண்டியது சர்க்காரின் கடமை. சர்க்காரும், இத் தொழிலும், ஏற்றுமதி விழிப்பை அடைந்தால்தான், மேலே கூறப்பட்டுள்ள இலாகாவின் அவசியத்தை உணர முடியும்.

# இது தெரியுமா?

## மழையே கிடையாதாம்!

ராஜபுதனத்திலிருக்கும் சிரடஞ்சி என்னும் இடத்தில், உலகத்திலுள்ள எல்லா இடங்களைக் காட்டிலும் அதிகமாக மழை பெய்கிறது. அதற்கு நேர் விரோதமாக ராஜபுதனத்திலுள்ள மணற் காடுகளின் மத்தியில் மழை என்பதையே காணாத கிராமம் ஒன்று இருக்கிறது. இந்தியாவிலுள்ள இடங்களுள் அதுதான் மிகக் காய்ந்த பிரதேசம் என்று கூறப்படுகிறது. சென்ற பத்து வருஷங்களாக அந்த கிராமத்தில் 'மழை என்பதே பெய்யவில்லையாம்.' காட்டு வாழ்க்கை நடத்திவரும் அங்குள்ள நூறு அல்லது நூற்றைம்பது மனிதர்கள் அங்கு அகப்படும் மிருகங்களைக் கொண்டு வியாபாரம் செய்து ஜீவிக்கிறார்களாம். அவர்கள் கூறுவதிலிருந்து அந்த கிராமத்தில் கடைசியாக மழை பெய்த வருஷம் 1930; அதுவும் தூத்தல்தான் என்று தெரிகிறது. அங்கு வசித்து வந்தவர்களில் பலர் ஜலக் கஷ்டத்தைச் சகிக்க முடியாமல் பக்கத்து சமஸ்தானங்களுக்குச் சென்றுவிட்டார்களாம். மிகுதி இருந்தவர்கள் அங்குள்ள ஓர் இயற்கை ஏரியை யண்டி ஜீவித்து வருகிறார்கள். அந்த ஏரித் தண்ணிதான் எப்பொழுதும் வடியாமல் அவர்களுக்கு உதவிபுரிகிறதாம். மழை பெய்வதற்காக வருணபகவானுக்கு யாகங்களும் யக்ஞங்களும் இந்த பாகத்தில் செய்கிறார்களாம். ஜெய்ஸால்மர் சமஸ்தானத்தின் கிழக்கு எல்லையாக இந்த கிராமம் அமைந்திருக்கிறது.

## ஆணிகளும் கண்ணாடிகளுமே ஆகாரமாம்!

தோல்பூரிலுள்ள ஈச்வந்தக்தர் என்னும் யோகி ஒருவர் தன் யோக சக்தியால் இரண்டிலிருந்து நான்கு அங்குல நீளமுள்ள ஆணிகளையும், கண்ணாடித் துண்டுகளையும் ஆகாரமாக உபயோகப்படுத்தி வருகிறாராம். இக்கடும் வஸ்துக்களை அவர் வெகு சலபமாகக் கடித்து விழுங்கி ஜீரணித்துக் கொள்ளுகிறாராம். இந்த அதிசய ஆகாரத்தை ஒரு கிளாஸ் தண்ணீருடன் சாப்பிடுகிறாராம். அவருக்கு ஒருவிதமான தீங்கும் இந்த ஆகாரம் இழைக்கவில்லையாம். இன்னொரு விசேஷம் என்னவென்றால், அவர் என்றாவது இந்த ஆகாரத்தை உட்கொள்ளா விட்டால் அன்று அவர் பலஹீனமாகத் தென்படுகிறாராம். பகலில் இடை வேளையில் ஒரு டம்ளர் தண்ணீர் குடிக்கிறார் என்றும், அத்தண்ணீர்தான் ஜீரணத்துக்கு உபயோகமாக இருக்கிறது என்றும் அவர் கூறுகிறாராம். அவசரத்தில் சாப்பிடுவதால் நன்றாகக் கடித்து விழுங்கப்படாத நீண்ட சில இரும்பு, கண்ணாடித் துண்டுகள் அவர் வயிற்றின் இரண்டு பக்கங்களிலும் வந்து தங்குகின்றனவாம். அவற்றை சுலபமாக வெளியே எடுத்துப் போட்டு விடுகிறார் என்பது அவர் வயிற்றில் காணப்படும் கீறுகளிலிருந்து தெரிகின்றது என்று கூறப்படுகிறது. வைத்தியர்கள் அவரைப் பரீக்ஷை செய்ததில் அவரும் எல்லாரையும்போல சாதாரண மனிதன்தான் என்று கூறுகிறார்களாம்.

* * *

## அம்ருத் மஹால்கள்

மைசூர் கால்நடைகளில் அம்ருத் மஹால், ஹால்விகர் என்கிற ஜாதி மாடுகள் மிகவும் சரித்திரப் பிரசித்தி பெற்றவைகளா இருக்கின்றன. அவைகளை விருத்தி செய்வதில் ராஜாக்கள் மிகுந்த சிரத்தை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். பல ராணுவத் தலைவர்கள் இந்த மாடுகள், யுத்த காலத்தில் எப்படி மிகுந்த உதவியளிக்கின்றன என்பதைத் தெளிவாய் எடுத்துக் கூறி இருக்கிறார்கள். மைசூர் ஸமஸ்தான திப்புவின் வெற்றிக்கு இந்த ஜாதி மாடுகளே காரணம் என்று ஹெக்டர் பெரிரா என்பவர் கூறுகிறார். ஐரோப்பாவில் பெனின்ஸூலஸ் யுத்தத்தின் போது வெல்லிங்டன் இவ்வித மாடுகள் தனக்கு இல்லையே என்று எங்கினாராம்.

இந்த ஹால்விகர் மாடுகளின் உற்பத்தியைப்பற்றிப் பலர் பலவாறாகக் கதைகள் கட்டியிருக்கிறார்கள்.




# பயிர் செய்யத் தகுந்த கரம்பு நிலங்கள்

[ராவ் பகதூர் எம். ஆர். ராமஸ்வாமி சிவன்]

மதுவிலக்குச் சட்டத்திலும், விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டத்திலும் சென்னை மாகாணம் மற்ற மாகாணங்களுக்கு வழிகாட்டியாக நடந்துகொண்டது. ஜனங்களின் பொருளாதார நிலையை முன்னேற்ற இன்னும் சில வழிகளும் இருக்கின்றன. அவற்றில் பயிர் செய்யப்படத் தகுந்த கரம்புநிலங்களைப் பயிர்த் தொழிலுக்கு உபயோகமாக்கிக் கொள்ளுவது ஒன்று. இது வேலையில்லாமல் திண்டாடும் படித்தவர்களுக்கும், படிக்காதவர்களுக்கும் போதியவளவு வேலை கொடுக்கத் தகுந்ததாக இருக்கும். வேலையில்லாதவர்கள் வசத்தில் நிலத்தைவிட்டுப் பயிர் செய்யச் சொல்லுவதற்குமுன் பூர்வாங்க விசாரணைகள் விவரமாக நடத்தவேண்டும்.

கொஞ்சகாலத்திற்கு முன் நான் விவசாய சாஸ்திர பட்டாதாரிகள் மாத்திரமே பண்ணை அமைத்துக்கொண்டு பயிர்த் தொழில் புரிய வேண்டும் என்று அபிப்பிராயப்பட்டேன். பிறகு தேசமெங்கும் "கிராமத்துக்குத் திரும்புங்கள்" என்ற கூக்குரல் ஒலிப்பதை உணர்ந்து வேலையில்லாத எல்லா பட்டதாரிகளையும் என் திட்டத்திற்குள் சேர்த்துக்கொள்ளத் தீர்மானித்தேன். உலகத்தில் பல பாகங்களில் படித்தவர்கள் விவசாயத் தொழில் நடத்தும் முறைகளையும் இப்பொழுது பஞ்சாப் மாகாணத்தில் இது சம்பந்தமாக என்ன செய்துவருகிறார்கள் என்பதையும் தெரிந்துகொண்ட பிறகு, இந்தியாவில் கிஸான் இயக்கத்தின் பிரச்னைகளைக் கவனித்த பிறகு இப்பொழுது கரம்பு நிலத்தை உபயோகித்துக்கொள்ள போட்டிருக்கும் என் திட்டத்தில் வேலையில்லாமல் திரியும் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களையும் தெரியாதவர்களையும் சேர்த்துக் கொண்டிருக்கிறேன்.

இதற்குப் பூர்வாங்கமாக பஞ்சாப் மாகாணத்தில் தற்சமயம், கையாளப்பட்டு வரும் முறைகளை, அம்மாகாண பிரத்யேக காலனேஸஷன் உத்தியோகஸ்தரைக் கண்டு பேசியதிலிருந்தும், அங்கு நடத்தப் பட்டுவரும் பண்ணைத் தொழிலைப் போய்ப் பார்த்ததிலிருந்தும், தெரிந்து கொண்டேன்.

காங்கிரஸ் மந்திரிசபை சட்டசபையில் மதுவிலக்குச் சட்டமும், விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டமும் கொண்டுவருவதுபோல், வேலையில்லாத திண்டாடும் படித்தவர்களுக்கும் படிக்காதவர்களுக்கும் உதவியளிக்கச் சாகுபடி செய்யத் தகுந்த கரம்புநிலங்களை உபயோகிக்க எடுத்துக் கொள்ள வேண்டிய பிரயத்தனம் அவ்வளவு சிரமமான காரியமல்ல. முக்கியமாக இப்படிக் கரம்பு நிலங்களைச் சாகுபடிக்குகந்ததாக மாற்றவும், திட்டத்திற்குப் பூர்வாங்க விசாரணை நடத்தவும், திட்டத்தில் சமயத்துக்கேற்றபடி மாறுதல் செய்யவும், பட்டா செய்வதற்கு வேண்டிய நிபந்தனைகளை உண்டு பண்ணவும், பண்ணைக்கு ஆட்கள் தேர்ந்தெடுக்கவும் பல இலாக்காக்களின் நல்லெண்ணமும் ஆதரவும் வேண்டும்.

நிதி சம்பந்தமாக பூரண அதிகாரமுள்ள பிரதம மந்திரியும் ரெவின்யூ, விவசாயம், கூட்டுறவு, தொழில், நீர்ப்பாசனம், பிரசாரம், ஆகிய இலாக்கா மந்திரி

களும் அவர்கள் காரியதரிசிகளும் இந்தத் திட்டத்திற்குப் பூரண ஆதாரவு அளிக்க வேண்டும். ஸெக்ரிட்டேரியட்டில் வேலை பார்ப்பவர்களும் கலெக்டர் ஆபீஸ் உத்தியோகஸ்தர்களும், இத்திட்டத்திற்குத் தங்கள் முழு உதவியையும் அளித்து, திட்டத்தைப் பூரண வெற்றியடையச் செய்வார்கள் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

இந்தியாவின் அரசியல் நிலைமை முன்னேறிக் கொண்டே வருகிறது. எந்தப் பெரிய முன்னேற்றத் திட்டத்திற்கும் சில பிற்போக்காளர் குறுக்கிட்டுத் தடுப்பார்கள். ஆனால், அவர்களைச் சுலபமாக வென்று விடலாம். வேலை யில்லாதவர்களுக்கு, வீணாகக் கிடக்கும் சாகுபடிக்குத் தகுந்த கரம்பு நிலங்களைக் கொடுத்து ஒத்தாசை செய்வதை எவரும் தடுக்கமாட்டார் என்று எண்ணுகிறேன். நமக்கு அவசியமாக தீர்க்காலோசனையும் வேலை செய்ய ஊக்கமும்தான் வேண்டும். காங்கிரஸ் மந்திரிகள் இவ்விரண்டு குணங்களும் தங்களிடத்தில் பூரணமாக இருக்கின்றன வென்று காட்டி இருக்கிறார்கள். எனவே இந்தப் பிரச்னையில் தங்கள் பிரயத்தனத்தைத் திருப்பினார்களானால் பொதுமக்களின் பொருளாதார நிலைமை நிச்சயம் முன்னேற்றமடையும். இதைத் தானே மந்திரிகளும் எலக்ஷன் சமயத்தில் தங்கள் நோக்கமாக எடுத்துக் கூறினார்கள்.

நான் உத்தியோகத்திலிருக்கும் போது ராயல் கமிஷனில் இரண்டு தரம் என் அபிப்ராயங்கள் கூறியிருக்கிறேன். இந்தியர்களுக்கே அதிகமாக உத்தியோகங்கள் கொடுக்க வேண்டும் என்று கேட்டேன். ஏனெனில், வெள்ளையர்கள் உயர்ந்த பதவிகளை வகித்தார்களானால் அவர்கள் வேலையை விட்டு ரிடயர் ஆனபிறகு அவர்கள் விசாலமான அறிவும் அனுபவமும் அவர்கள் தாய் நாட்டுக்காவது அல்லது குடியேற்ற நாட்டுக்காவதுதான் உபயோகப் படுமே தவிர, நம் தேசத்துக்கு உபயோகப்படாது. அப்படி இல்லாமல் இந்தியர்களானல் அவர்கள் தங்கள் கனிந்த அனுபவத்தையும் அறிவையும்நம் தாய் நாட்டுக்கே அர்ப்பணம் செய்வார்கள். என்னுடைய 34 வருஷ அனுபவத்தில் நான் வேண்டிய வளவு தெரிந்துகொண் டிருக்கிறேன் என்பது என் திட நம்பிக்கை. ஒருவித பிரதிபலனையும் எதிர்பார்க்காமல் நான் என் தாய் நாட்டிற்குத் தொண்டு செய்து கொண்டு தான் இருக்கிறேன். இன்றும் என்னைப் போல் பல நண்பர்கள் இருக்கிறார்கள் என்று எடுத்துக் கூறவேண்டியதில்லை.


## BOOKS FOR ALL

Books by K. S. Venkataramani

| | Rs.A. |
|---|---|
| Jatadharan & other Stories | 1 8 |
| Paper Boats | 1 0 |
| Kandan the Patriot | 2 0 |
| Cat - guts, by Manjeri S. Iswaran | 0 12 |
| Love of Dust by Shankar Ram | 3 0 |
| India's Road to Socialism by K. Santanam M.L.A. (Cen.) | 1 0 |
| Three Men of Destiny by A. S. P. Iyer I.C.S. | 3 0 |
| **Books by S. V. V.** | |
| Soap Bubbles | 1 0 |
| Much daughtered | 1 0 |
| A Holiday Trip | 1 0 |

**Svetaranya Ashrama Book-Shop,**
295, Linghi Chetty Sreet,
G. T., MADRAS.


## குழந்தைகளுக்கு

பதினைந்து வயதிற்குட்பட்ட குழந்தைகள் எழுதிய கட்டுரை கதைகளைப் பிரசுரிக்க பாரதமணியில் ஒரு பக்கம் விடப்பட்டிருக்கிறது. குழந்தைகளுக்கு எழுதுவதில் பயிற்சி அளிக்கவேதான் இத் தீர்மானம் செய்யப்பட்டிருக்கிறது. எனவே குழந்தைகள் அனைவரும் பாரதமணியின் பக்கங்களை தங்களுக்கு உபயோகப்படுத்திக் கொள்வார்கள் என்று நம்புகிறோம். அவர்கள் எழுதியனுப்பும் கட்டுரைகள் கதைகளை ஆவலுடன் வரவேற்கிறோம்.

ஆசிரியர்

# துண்டு காகிதம்

[டாக்டர் கே. ஆர். ஸ்ரீனிவாஸ அய்யங்கார், எம். ஏ., பெல்காம்]

வீட்டைக்காலி செய்து சாமான்களை யெல்லாம் ஒரு மோட்டார் லாரியிலேற்றி ஸ்டேஷனுக்கு அனுப்பியாய் விட்டது. ஒரு குண்டுமணி விட்டுப் போகவில்லை. கேசவன் எல்லாக் கதவுகளையும் சாத்தித் தாளிட்டு விட்டு வாசலிற்கு வந்தான். அங்கு டெலிபோனின் பக்கம் கிடந்த டைரெக்டரி (Directory) நடுவிலிருந்து துறுத்திக்கொண்டிருந்த ஒரு துண்டு காகிதத்தைப்பார்த்தான். இதென்ன! காகிதம் முழுதும் ஏதோ எழுதப்பட்டிருக்கிறது. சிலவார்த்தைகள், சில நம்பர்கள்; ஆனால் வெவ்வேறு மைகளிலும் ஸந்தர்ப்பங்களிலும் எழுதியகுறிப்புக்கள். கேசவன் ஸ்தம்பித்தவன்போல அக்குறிப்புக்களை தனக்குள் வாசிக்கலானன். ஆம்; அவன் சரித்திரமே அக்குறிப்புக்களிலடங்கியிருந்தது.

"சாந்தா, **2004**." சாந்தா, மேரி ராணி காலேஜில் படித்துக் கொண்டிருந்தாள். அவள் தகப்பனர் வக்கீல். அவருடைய டெலிபோன் நம்பர் தான் 2004.

அடுத்தபடி "பாங்க், **3074**". அந்த பாங்கில்தான் கேசவன் பொக்கிஷதாரனுகை வேலை பார்த்து வந்தது.

"ராக்ஸி, வெல்லிங்டன், பாரகன்...." சாந்தாவைக் கலியாணம் பண்ணிக் கொண்ட பிறகு, தனிக்குடித்தனம் செய்த காலத்தில் அவர்கள் அடிக்கடி டாக்கிகள் விஜயம் செய்வது வழக்கம். மயிலாப்பூரில் தங்கள் வீட்டிலிருந்தே ஸீட்கள் பதிவு செய்ய டாக்கி கம்பனிகளின் டெலிபோன் நம்பர்களை கேசவன் தனியேகுறித்து வைத்திருக்கவேண்டும்.

இதென்ன! "வீராசாமி செட்டி", "சுராஜ்மல்"! அதுவும் சாந்தா கையெழுத்தில்! புடவை, நகைக்காரர்களாக்கும்!

"சோமு" என்று எழுதி பின்னல் அடித்து இருக்கிறது: பாவம், சோமு கேசவனின் நண்பன். இரண்டு மாதத்திற்குமுன் டைபாயிட் ஜுரத்தால் காலமானன். இதுதான் மனித வாழ்க்கையின் முடிவு!

"அம்மாமி" இது கேசவனின் மாமியாரைத்தான் குறிப்பிட வேண்டும். கேசவனுக்கு தாயும் தகப்பனும் கிடையாது. கலியாணமானவுடன் அம்மாமி சின்னஞ்சிறு தம்பதிகள் வழிவரவில்லை. ஆனல் இப்பவோ அவசியம் நேர்ந்து விட்டது. உதவிக்கு வந்திருக்கிருள்.

"டாக்டர்" "மருந்து ஷாப்", காரியம் விபரீதமாக இருக்கும்போ லிருக்கிறது. சாந்தா பிரஸவத்தை யொட்டித்தானிருக்க வேண்டும்.

"கிருஷ்ண ஹோட்டல்," வீட்டில் அமளி. சாப்பாடு ஹோட்டலிலிருந்து வர வேண்டியிருக்கிறது.

இதற்குமேல் கேசவனல் வாசிக்கமுடியவில்லை. "ஹிந்து"......சாந்தா மரணத்தைப்பற்றி ஒருகுறிப்பு போடச்சொல்லத்தானிருக்கவேண்டும். எல்லாம் முடிந்து விட்டது!

பத்து வார்த்தைகள், பத்து நம்பர்கள் மட்டும்தான்! ஆனல் இரண்டு நிமிஷத்தில் இரண்டு வருஷங்களில் நடந்த ஸம்பவங்களெல்லாம் கேசவன் முன் நின்றன. கண்ணீரும் தாரை தாரையாய் வந்தன.

அத்துண்டுக்காகிதத்தை மடித்து தன் சட்டைப்பைக்குள் கவனமாக வைத்துக் கொண்டு வீட்டை விட்டு கேசவன் தெருவை நோக்கிச் சென்ருன்

(ஒரு ஸ்வீடிஷ் கதையைத் தழுவி எழுதியது)

# ஹார்மோனிய பஹிஷ்காரம்

[ஏ. என். கலியாணசுந்தரம், எம். ஏ.]

[வாத்யங்கள் அனைத்தும் ஒலிக்கின்றன. சப்தம் அடங்குகிறது. வீணாதேவி கம்பீரமாக மேடைமீது ஏறி கனைத்து(தாளத் தந்திகள் மீட்டப்படுகின்றன) மற்றொரு வீணை "ஸ்வரராக ஸுதாரஸ" என்ற சங்கராபரணப் பாட்டு வாசிக்க பேசுகிறார்]

வீணை :—வாத்ய சபையோர்களே! புராதனமான நம் சங்கீதம் புனிதமானது. இதைக் குலைக்க ஹார்மோனியமே காரணமாக விருப்பதால் நம்மிடையிலிருந்து அவரை நீக்கிவிடவேண்டும் என்று முடிவு செய்யக் கூடியிருக்கிறோம். குமாரி முரளீ இத் தீர்மானத்தைப் பிரேரித்துப் பேசுவார். குமாரி முரளீ.

வாத்யங்கள் கோஷித்து அடங்குகின்றன. முரளி லலிதமாய் நடந்து மேடை மீது ஏறுகிறாள். புல்லாங்குழல் ஒன்று ஸ-ப-ஸ என்ற குழைவுடன் வாசிக்கிறது. "கீதார்த்தமு" என்ற சுருட்டி ராகப் பாட்டு பின்னணியிலிருக்க முரளீ பேசுகிறார்.

முரளீ :—நண்பர்களே! ச்ருதிக்ஞானம், கமகம், குழைவு முதலியவைகள் மறைந்து, நமது சங்கீதம் தற்காலம் உருமாறிச் சீர் குலைந்ததின் காரணம் இந்த ஹார்மோனியத்தின் சேர்க்கை தோஷந்தான். இனிமையை அழித்துச் சங்கீதத்தைப் பழிக்குள்ளாக்கினவரும் இவர்தான். இந்த ஹார்மோனியம் நம்மிடை இருக்கும்வரை நம் சங்கீதம் திருந்தாது. அதற்குப் பதிலாக அடியுடன் அழிந்துவிடும். ஆகையால் "ஹார்மோனியத்தை நம்மிடையிலிருந்து விலக்கிவிட வேண்டும்" என்ற தீர்மானத்தை ஒரேமனதாக நிறைவேற்றிவிட வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன். (வாத்ய கோஷம்)

வீணை :—ஸ்ரீமான் பிடில் இதை ஆமோதித்துப் பேசுவார்.

வாத்யகோஷம். "ராகஸுதாரஸ" என்ற மயூரத்வனி ராகப் பாட்டு பின்னணி சங்கீதமாக விளங்க, பிடில் பேசுகிறார்.

பிடில் :—ஸகோதர ஸகோதரிகளே! நான் அன்னிய தேசத்தவனாக இருந்த போதிலும் சங்கீத மென்னும் கடலில் மூழ்கி இத்தேசத்தவனாக ஆகிவிட்டேன். என்னைப் போலவே ஹார்மோனியரும் அன்னிய தேசத்தவர்தான். இருந்தாலும், சங்கீதக் கடலில் மூழ்கிப் பரிசுத்தமடைவதற்குப் பதிலாகச் சங்கீதக் கடலையே அசுத்தமாக்கி விட்டார் (வாத்தியச் சிரிப்பு)

ஜலதரங்கம் :—ஒரு துளி விஷம் போறாதா (வாத்தியச் சிரிப்பு).

பிடில் :—விஷம் மட்டிலும் இல்லை விஷமும் இருந்தது (மீண்டும் வாத்தியச் சிரிப்பு) தன் வயிறு நிறையக் காற்றைச் சாப்பிட்டுவிட்டு, காற்றை எழுப்பிக் காட்டுச் சத்த மிட்டு, சங்கீதத்தின் இனிமையை மூழ்கடித்தவர் அவர்தான். கட்டைக் குரலுடன் மொட்டை மொட்டையாக அபஸ்வரங்களுடன் பாடுபவர்களை, வித்வான்கள் என்று துருத்தி ஊதி ஊரை ஏமாற்றியவர் ஹார்மோனியர்தான்.

மிருதங்கம் :—எருமை, கழுதை இவைகளெல்லாம் பாடவில்லையா? (வாத்தியச் சிரிப்பு)

பிடில் :—அவை சங்கீதமானால் ஹார்மோனியரின் கூப்பாடும் சங்கீதம்தான். கழுதை மாதிரிக் கத்துவதா சங்கீதம்? இல்லவே இல்லை. பாவம், நயம், குளுமை இவைகளுடன் ஸுஸ்வரமாய் இருப்பது தான் சங்கீதம். இவை ஹார்மோனியரிடம் உண்டா? இம்மாதிரி அவரால் வாசிக்க முடியுமா? இல்லை; வேறு எவருக்காகிலும் ஹார்மோனியரிடமிருந்து இம்மாதிரி சங்கீதம் உண்டாக்க முடியுமா? அல்லது உண்டாக்கத்தான் தெரியுமா? இவை எல்லாவற்றிற்கும், "இல்லை முடியாது" என்பதைத் தவிர வேறு பதிலே கிடையாது. ஆகையால் அவரிடம் சங்கீத வாத்யத்திற்கு வேண்டிய யோக்யதை அடியுடன் கிடையாது. ஆகையால் யோக்யதை அற்ற ஹார்மோனியரைச் சிறிதும் இரக்கமின்றி

நம் இடையிலிருந்து விலக்கி விடுவதே நம் கடமை. (வாத்திய கோஷம்)

வீணை :—ஸ்ரீமான் ஹார்மோனியம் இப்பொழுது பதில் சொல்லுவார்.

எங்கும் நிச்சப்தம். இதுவரை ஸங்கீதத்திற்கு ஸ்ருதியாக இருந்த தம்பூர் சப்தம் நிற்கிறது. திடீரென்று நிச்சப்தத்தைக் கிழித்துக் கொண்டு "ச்ருதிப் பெட்டி" அலறுகிறது. காம்போஜீ ராக "எவரிமாட" என்ற கீர்த்தனத்தை மற்றொரு ஹார்மோனியம் வாசிக்க ஹார்மோனியம் பேசுகிறார்.

ஹார்மோ:—ஸகோதர ஸகோதரிகளே!

வாத்தியங்கள் :—(கோஷிக்கின்றன) இல்லை, இல்லை!

ஹார்மோ:—வாத்திய சிரோமணிகளே!

கடம் :—ஹும். அப்படிப் பேசு. (வாத்தியச் சிரிப்பு)

(இந்தக் கடம் வேறொருவருமில்லை. நடேசன் பானைதான் என்பதால் நான் மார்பைத் தூக்கிக்கொண்டு உட்கார்ந்தேன்)

ஹார்மோ :—என்னைக் கண்டால் உங்களுக்கு வெறுப்பாக இருப்பதால் தான், நமது சங்கீதம் சீர்குலையக் காரணம் நான் என்று என்னைக் குறை கூறுகிறீர்கள். என் மேல் உங்களுக்கு இவ்வித வெறுப்பு ஏன் உண்டாயிற்று என்று எனக்கு நன்றாகத் தெரியும். இதற்குக் காரணம் என் குரூபமான உருவந்தான். இது என் குற்றம் அல்ல. என்னைப் படைத்தவன் தவறு.

ஸாரங்கி :—படைக்காமலேயே இருந்தால் நன்றாக இருந்திருக்கும். (வாத்தியச் சிரிப்பு)

ஹார்மோ :—அதுவும் என் குற்றமல்ல. பாடத் தெரியாதவர்களைப் பாதுகாத்தது ஒரு தவறா? அவர்களை வித்வான்கள் என்று ஜனங்கள் நினைத்து ஏமாந்தால் நான்-(தொண்டைக் கம்மல்-ஹார்மோனிய அபஸ்வரம் - வாத்தியச் சிரிப்பு) - நான் என்ன செய்வேன்? எல்லோருக்கும் காது கேட்க வேண்டுமே என்று கூச்சலிட்டது ஒரு குற்றமா? உங்களுக்கு அம்மாதிரி செய்யச் சக்தி யில்லாவிட்டால் அதற்காக என்மேல் ஆத்திரப்படு.. ........

வாத்தி:—(கோஷம்) அவமானம். வாயை மூடு. மன்னிப்புகேள்.

வீணை :—ஒழுங்கு. (ஒழுங்கு. தாளத் தந்தியை மீட்டுகிறார். சப்தம் அடங்குகிறது. ஹார்மோனியம் "கந்தா காருண்யனே" வாசிக்கிறது.)

ஹார்மோ :—நான் சொன்னதைத் தவறாக எடுத்துக் கொள்ளக் கூடாது. என் சக்திக்குத் தக்கபடி நான் வேலை செய்தேன். அளவுக்கு மீறி என்னை உபயோகித்தது யார் குற்றம்? எல்லா இடங்களிலும் என்னை உபயோகித்தது யார் குற்றம்? அதனால் நேர்ந்த விபரீதங்களுக்கு நானா காரணம்?

தில் ரூபா :—உன்னைப் படைத்தவன் தான் காரணம். (வாத்தியச் சிரிப்பு)

ஹார்மோ :—ஆம், அதைத்தான் நானும் ஆரம்பத்திலேயே சொன்னேன். நான் வருமுன் இத்தேசத்தில், சங்கீதம் இருந்த நிலை என்ன? லக்ஷத்தில் ஒருவருக்குத் தான் பாடத் தெரியும். சங்கீதத்தைப் பத்திரமாகப் பெட்டியில் போட்டுப் பூட்டி அவர்களிடமே வைத்திருந்தார்கள். வெளியில் வருவது துர்லபமாக இருந்தது. நான் வந்த பிறகோ...........

ஸிதார் :—அடியுடன் தொலைந்துவிட்டது.. (வாத்தியச் சிரிப்பு)

ஹார்மோ :—தொலைவதற்குப் பதிலாக விருத்தியடைந்தது. குறைந்தது நூற்றுக்குப் பத்து பேருக்காவது சங்கீதம் அப்யாஸமாகி விட்டது, ஏன்? என் மூலமாகச் சங்கீதம் கற்றுக்கொள்வது சிறுவர் சிறுமிகளுக்கும் சுலபமாக இருந்தது. உத்ஸாகத்துடன் கற்றுக் கொண்டார்கள். சிறிது காலத்திற்குள் எல்லார் வீட்டிலும் நான் குடிகொண்டு விட்டேன்.

மோர்சிங் :—ஆம், குடியைக்கெடுத்தாய். (வாத்திய கோஷம்)

ஹார்மோ :—இவ்விதம் சங்கீதத்தை விருத்தி செய்து தொண்டு புரிந்ததற்குப் பலன், என்னை விரட்டப் பார்க்கிறீர்கள். அது ஒரு காலமும் முடியாத காரியம். நான் இல்லாத வாத்தியகோஷ்டி தீபமில்லாத வீடுபோல் இருக்கும். வாய்ப்பாட்டுக்கு பக்கமேளமாக என்னை ஏற்பாடு

செய்வது தவறுதான். ஆனால் தவறு செய்தவர்களைத் தண்டிப்பதற்குப் பதிலாக என்னைத் தண்டிப்பது தருமமா? நான் கேட்பது நியாயந்தானே?

முரளீ:—நியாயந்தான். (சபையில் திகைப்பு).

ஹார்மோ:—பெண் என்றால் பேயுமிரங்கும் என்பார்கள். என்னைப் 'பேய்' என்றும் "பேயின் வாத்தியம்" என்றும் கூறினீர்கள். பெண்ணைக் கண்டு பேய் இரங்குவதற்குப் பதிலாகப் பேயைக் கண்டு பெண் இரங்கினதை நீங்கள் கவனிக்கவேண்டும். ஸ்ரீமான் பிடில் "நான் சரியாக வாசிக்க மாட்டேன். என்னை சரியாக வாசிக்க ஒருவருக்கும் தெரியாது" என்று என்மேல் குறை கூறினர். "இந்தியாவில் ஒருவருக்குமே சரியாகப் பிடில் வாசிக்கத் தெரியாது. பிடிலைச் சரியாகப் பிடித்துக் கொண்டு, சரியானபடியில் போடத் தெரிந்த இந்தியர்கள்.-பண்டிதர்களோ,பாமரர்களோ-ஒருவருமில்லை" என்று தென்னிந்தியப் பிரமுகர் ஒருவர் தம் புத்தகத்தில் எழுதியிருப்பதை ஸ்ரீமான் பிடிலுக்கு ஞாபகப்படுத்துகிறேன். சரியானபடி வாசிக்காவிட்டால் எல்லா வாத்தியங்களும் அபஸ்வரமாகத் தான் இருக்கும். இக்குறை எனக்கு மாத்திரம் இல்லை. உங்கள் அனைவருக்கும் உண்டு. இவ்வளவு நாள் உங்களுடன் சேர்ந்து வாழ்ந்துவிட்டு இப்பொழுது உங்களைப் பிரிவதென்றால் என் மனம் தத்தளிக்கிறது. இரக்கமின்றி இருக்க உங்களால் முடியுமா? இதை எல்லாம் நன்றாக யோஜித்துத் தீர்மானம் செய்யும்படி உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

நிச்சப்தம். தம்பூர் ச்ருதியுடன் மற்றொரு வீணை "நாத தனும்னிசம் சங்கரம்" என்ற பாட்டு வாசிக்க வீணை பேசுகிறார்.

வீணை:—நண்பர்களே! ஸ்ரீமான் ஹார்மோனியம் மிகவும் சாதுர்யமாகப் பேசி பழியை எல்லாம் மற்றவர்கள் மீது சுமத்திவிட்டார். குற்றமெல்லாம் மற்றவருடையது. என்மேல் ஒரு குற்றமும் இல்லை" என்று அவர் கூறினர். அது அடியுடன் தவறு. (வாத்திய கோஷம்) ஏனென்றால் பிறவியினால் ஒருவனும் அயோக்கியன் இல்லை. பிறக்கும் பொழுது அனைவரும் யோக்கியர்களாகவே பிறக்கிறார்கள். பிறகு அவரவர்கள் நடத்தையால், தாமும் கெட்டு உலகத்தையும் கெடுக்கிறார்கள். "நான் ஏமாற்றினால் புத்தியில்லாமல் மற்றவர்கள் ஏன் ஏமாறவேண்டும்? அது என் குற்றமல்ல" என்ற சமாதானம் அயோக்கியனை யோக்கியனாக மாற்றாது. "என்னை அளவுக்கு மீறி உபயோகித்ததால் நேர்ந்த விபரீதங்களுக்கு நான் பழி அல்ல" என்று கூறினர். இனிமேல் விபரீதமே நேராமலிருக்க அவரை உபயோகிப்பதை நாம் அடியுடன் ஒழித்து விடுவோம். (வாத்திய கோஷம்) பசுக்களுக் கிடையில் புகுந்த புலிபோல், தன் கெட்ட குணங்களால் சங்கீதத்தை நாசம் செய்து விடுகிறார். ஏன் அநேகமாக நாசம் செய்துவிட்டார் என்றே சொல்லலாம்.

கஞ்சிரா:—அவமானம்! அவமானம்.

வீணை:—ஆகையால் அடியுடன் நாசம் செய்வதற்குள் அவரை நம் கூட்டத்திலிருந்தே ஓட்டிவிடுவதே நம் கடமை என்று நான் எண்ணுகிறேன். (வாத்திய கோஷம்). ஆகையால் ஹார்மோனியத்தை நம் இடையிலிருந்து விலக்கிவிட வேண்டுமென்ற தீர்மானத்திற்குச் சாதகமாக இருப்பவர்கள் தயவு செய்து கோஷம் செய்ய வேண்டும்.

ஹார்மோனியம் தவிர மற்ற எல்லா வாத்தியங்களும் கோஷிக்கின்றன.

வீணை:—பாதகமாக.

ஹார்மோனியம் தனியாக அலறுகிறது.

வீணை:—பாதகமாக ஹார்மோனியம் ஒருவர்தான். தீர்மானம் நிறைவேறிவிட்டது. (வாத்திய கோஷம்) இன்று முதல் நம் கோஷ்டியிலிருந்து ஹார்மோனியம் விலக்கப்பட்டிருக்கிறார். (வாத்திய கோஷம்)

"பண்டித மோதிலால் நேரைப் பறிகொடுத்தோமே" என்ற பாட்டை ஹார்மோனியம் ஒன்று வாசிக்க, ஹார்மோனியம் பேசுகிறார்.

ஹார்மோ:—பறி கொடுத்தேனே, நான் பரதவிக்கிறேனே. நான் என் உரிமையை இழந்தேனே, ஸங்கீத வாத்யமென்ற உரிமையை இழந்தேனே. என்னைப் படைத்தவன் குற்றத்தால் இக்கதியை அடைந்தேன்.

ஹார்மோனியம், "போய் வருவேன் சபையோரே" என்ற பாட்டு வாசிக்கிறது.

ஹார்மோ.—ஆனால் என் மனம் உடையவில்லை. எனக்குச் சாவு மணியாக நீங்கள் அடித்தது என் வாழ்வு மணியே. நீங்கள் விலக்க தீர்மானித்ததால் என்ன பயன்? நான் போனால் தானே. காற்றுள்ளவரை எனக்குக் குறைவில்லை, சாவுமில்லை. ஆகையால், "போய் வருவேன் சபையோரே போய் வருவேன் நான்."

என்று பாடிக்கொண்டே ஹார்மோனியமும் அவர் வம்சத்தார்களும் வெளியே சென்றனர். சபையில் ஒரே குழப்பம். இந்தக் குழப்பத்தில் நான் சந்தடி செய்யாது கூட்டத்தில் நுழைந்து, நடேசன் பானையின் கழுத்தைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு அங்கவஸ்திரத்தைப் போட்டு மூடிக்கொண்டு, ஒருவரிடமும் சொல்லிக் கொள்ளாமல் கிளம்பி வீட்டை அடைந்தேன். பானையைக் கண்டதும் நடேசன் கொண்ட ஆனந்தத்திற்கு அளவில்லை. ஆனால் அன்று முதல் கன்றுக் குட்டியைக் கட்டும் கயிறால் பானையை எப்பொழுதும் கட்டியே வைத்திருக்கிறான்.


# இந்தியன் பாங்க், லிமிடெட்.

(ஸ்தாபிதம்: 1907)

தலைமை ஆபீஸ்:—சென்னை, வடக்கு பீச் ரோட்.

**லோகல் ஆபீசுகள்:**

| | | | |
|---|---|---|---|
| எஸ்பிளனேட் | : பிராட்வே | புரசைவாக்கம் | : புரசைவாக்கம் ஹைரோட் |
| திருவல்லிக்கேணி | : பெரிய தெரு | ராயப்பேட்டை | : பஜார் ரோட் |
| மைலாப்பூர் | : வடக்கு மாடவீதி | சௌகார்பேட்டை | : சைனா பஜார் ரோட் |
| தியாகராயநகர் | : பிரகாசம் ரோட். | | |

**பிராஞ்சுகள்:**

அடோனி, ஆலப்பிழை, பெங்களூர், பெங்களூர் கண்டோன்மென்ட், பெஜவாடா, பம்பாய், கொச்சி, கோயம்பத்தூர், கொழும்பு, ஈரோடு, குண்டூர், காரைக்குடி, கும்பகோணம், மதுரை, புதுக்கோட்டை, கொல்லம், சேலம், திருநெல்வேலி, திருப்பூர், திருவாரூர், திருச்சூர், திருச்சினாப்பள்ளி, தூத்துக்குடி கள்ளிக்கோட்டை.

சப் ஆபீசுகள்: குடிவாடா, தெனாலி, பீமாவரம், ரேபள்ளி, தனுகு, துக்கிரிலா, நரசராவ்பேட்டை, தேவகோட்டை, உடுமலைப்பேட்டை, மருதெரு.

லண்டன் நியூயார்க் ஏஜண்டுகள்: நேஷனல் ஸிடி பாங்க் ஆப் நியூயார்க்

| | | |
|---|---|---|
| வாக்களிக்கப்பட்ட முலதனம் | ரு. | 47,92,800 |
| கோரப்பட்டு, செலுத்தப்பட்ட முலதனம் | ரு. | 12,79,280 |
| ரிஸர்வ்களும், மற்ற நிதிகளும் | ரு. | 17,92,762 |
| ஷேர் ஹோல்டர்களின் ரிஸர்வ் பொறுப்புகள் | ரு. | 35,13,520 |
| 31—12—39-ல் வொர்க்கிங் பண்டுகள் | ரு. | 4,70,31,536 |

N. கோபால அய்யர், காரியதரிசி.

# பிரேமை

[ஆர். ராமஸ்வாமி, மாயவரம்]

பாபூ ராம்ஜீதாஸ் உட்கார்ந்து ஹுக்கா குடித்துக்கொண்டிருந்தார். அப்பொழுது தான் அவருடைய சகோதரனுடைய குமாரனுன மோகன்தாஸ் வந்துஅவரைக்கட்டிக் கொண்டு, 'சித்தப்பா, சித்தப்பாத ரயில் வண்டி வாங்கித்தா' வென்று அவரைத் தொந்தரவு செய்ய ஆரம்பித்தான். அவனுடைய வசிகரமான முகத்தையும் மழலைச் சொற்களையும் கேட்டு ராம்ஜீதாஸ் அளவில்லா மகிழ்ச்சி யடைந்தார். அவர் அவனுடன் விளையாட ஆரம்பித்தார். அவன் விளையாடிக்கொண்டே தனது சித்திராமேச்வரி அம்மாள் மடியில்போய் விழுந்தான். அவள் உடனே கோபத்துடன் பிடித்து கிழே தள்ள, அவன் அழுதுகொண்டே சென்ருன்.

பாபூ ராம்ஜீதாஸ் ஆக்ராவிலுள்ள ஒரு பெரிய ஜமீன்தார். அவருக்குப் புத்திரப் பேறு இல்லை. ஆகையால் அவர் தன் சகோதரனுடைய குமாரர்களான மோகன் தாஸையும் கோகுல சந்திரனையும் தன் குமாரர்க ளென்றே கருதிவந்தார். ஆனல் அவருடைய பத்னி ராமேச்வரியோ குழந்தையில்லா துக்கத்தினல் மனம் புழுங்கி வந்தாள்.

ஆனல் பாபூஜி அவளுக்குஎன்ன சொல்லியும் அவளைத் திருத்த முடியவில்லை. இக்காரணத்தால்அவர்களுடையதாம்பத்ய வாழ்க்கையில் சில சமயங்களில் சச்சரவு ஏற்படும். பாபூஜியின் பிரியமான குழந்தைகளை அடிக்கவும் திட்டவும் ஆரம்பித்தாள்.

ஓர்நாளைய சம்பவம். ராமேச்வரி அம்மாள் மேல் மாடியில் உட்கார்ந்து காற்று வாங்கிக்கொண் டிருந்தாள்.

கோகுலனும் மோகனனும் சண்டையிட்டுக்கொண்டே ராமேச்வரியின் மடியில் வந்து விழ்ந்தனர். ராமேச்வரி அவர்களிடமுள்ள 'த்வேஷத்தையும் மறந்து அவர்களைக் கொஞ்ச ஆரம்பித்தாள். பாபூஜி அப்பொழுது ஒரு விளையாட்டு ரயிலை எடுத்துக் கொண்டேவர இரு குழந்தைகளும் அவரிடமிருந்து ரயிலைவாங்கிக் கொண்டே சென்றுவிட்டன. பாபூஜி, "என்ன நீயே இப்படிக் கொஞ்ச ஆரம்பித்துவிட்டாய்?" என்று கேட்டார். உடனே அம்மாள் சினந்து உள்ளே சென்று விட்டாள்.

மறு நாளும் வழக்கம்போல் அம்மாள் மாடியில் உட்கார்ந்து கொண்டு என்னவோ யோசித்துக்கொண் டிருந்தாள். அப்பொழுதுதான் அங்கு வந்த மோகன்தாஸ் வானத்தில் பறக்கும் பறவைகளைப் பார்த்துக்கொண்டிருந்தான். உடனே அவன் ஒரு பறவை நம் மாடியில் விழாதா என்று எண்ணினன். இந்த எண்ணம் அவன் மனதில் தோன்றவே அவன் ராமேச்வரியிடம் சென்று, "சித்தி ஒரு பறவை வாங்கித்தா," என்று கேட்டான். உடனே அவள், "எல்லாம் உன் சித்தப்பாவைக் கேள்" என்று சினந்து மொழிந்தாள். மோகன் வருத்தமடைந்து கைப்பிடிச் சுவரைப் பிடித்துக்கொண்டு பறவைகளைப் பார்க்க ஆரம்பித்தான். அதிர்ஷ்ட வசமாய் ஒரு பறவை பறந்துவந்து முற்றத்தில் விழுந்தது. மோகன் எட்டிப் பார்த்தான். உடனே அவன் கால் மாடியிலிருந்து நழுவ அவன் சுவரைப் பிடித்துக்கொண்டு தொங்கினன். பையன் பயந்து, "சித்தீ, சித்தீ" என்று கதறினன். ராமேச்வரிக்கு அவன் மேலிருந்த வருத்தம் தோன்றவே அவள் தயங்கினள். ஆனல் மறு நிமிஷமே அங்கு சென்ருள். அதற்குள் பையன் அய்யோ என்ற சத்தத்துடன் கிழேவிழுந்தான். ராமேச்வரியும்மூர்ச்சையடைந்துவிழுந்தாள்.

ஒரு வாரமாக ராமேச்வரிக்கு கடுமையான ஜுரம். இப்பொழுது சற்று குணமடைந்துவருகிருள். மோகனும் குணமடைந்துவருகிருன். கடைசியாக இருவரும் குணமடைந்தனர். ராமேச்வரி மோகனை வெறுத்து வந்தாளல்லவா? இப்பொழுது அவள் மோகனையும் கோகுல சந்திரனையும் உயிராக மதித்து வருகிருள். அதுமுதல் பாபூஜியும் மிகவும் சந்தோஷமடைந்தார்.

# வலையர் வாழ்வு

[நீ. ராமசாமி, மாம்பலம்]

குளிர்ந்த காலை நேரம். பனி பெய்து கொண்டிருந்ததால் தலையில் துண்டைப் போட்டுக் கொண்டு பீச்சை நோக்கி, நடந்தேன். கடலிலிருந்து கிளம்பி உருண்டு திரண்டு வரும் தங்கப் பிழம்பைக் கண்டு களிக்கவே அவ்வளவு அவசரமாய்ப் போனேன். எனக்கு முன் பல மீன்காரர் அங்கு வந்து தங்கள் வேலையில் ஈடுபட்டிருந்தனர். காலைக் குளிரைப் போக்கப் பெருஞ் சுருட்டுகளைப் புகைத்துக்கொண்டிருந்தனர். அவருள் கிழவர் கரையில் நின்ற வாறே 'இப்படிச் செய்', 'அப்படிச் செய்' என்று சட்டமிட்டுக் கொண்டிருந்தனர். வாலிப வலைஞர் பலர் சுறுசுறுப்பாய்க் கட்டு மரங்களை ஒழுங்கு படுத்தலாயினர். வலை, உணவு முதலியவை கெட்டியாய் பிணைக்கப்பட்டவுடன், கட்டு மரங்களில் பயணமாயினர்.

முதலில் அவர்கள் அலையில் அடிபட்டுத் திக்கு முக்காடியதைப் பார்க்க வேண்டுமே! பெரும் அலைகளுக்கு மேல் அவர்கள் எழும்பிக் கொடுத்துச் சமாளிக்கும் போதும், கரையிலுள்ள சிறியோரும் பெரியோரும் உரக்கச் சத்தமிட்டு அவர்களை ஜாக்கிரதைப் படுத்தும்போதும், நானும் என்னை யறியாமல் உரக்கச் சத்தமிடலானேன். "தாங்கிக் கொடுடா...... தாண்டடு அந்த அலையை......ஐயோ... போச்சு..." என்றெல்லாம் நாங்கள் கத்தினோம். ஒரு கட்டு மரம் கவிழ்ந்து, கரையருகில் தள்ளப்பட்டது. அவ் வீர வலையர் ஒரே நிமிஷத்தில் நீரிலிருந்து கிளம்பி, மறுபடியும் கட்டு மரத்தை அலைகளைத் தாண்டிக் கொண்டு போயினர். 'அப்பாடா' என்றேன் குதூகலத்துடன்.

இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தான் ஒரு கிழவன். "எஞ்சாமி, வேடிக்கையாயிருக்குதா, 'இதெல்லா'?" என்றான், பல்லை யிளித்துக் கொண்டே.

"அது கிடக்கட்டும் கிழவா. இந்தக் குளிரிலே கட்டுமரம் கவுந்தா எப்படியிருக்கும்?...'என்னால் முடியாதப்பா" என்றேன், குளிரினால் உடலைக் குலுக்கிக் கொண்டே.

"பூ...இதென்னசாமி. ஒங்க வவுசிலே நா'ல்லா' என்னு செஞ்சேனுங்க தெரீ'ங்களா?" என்று அவிழ்த்து விட்டான் தன் கதையை.

"இப்பல்லாம் நீ மீன் பிடிப்பது கிடையாதா, கிழவா...மவனுக இருக்காங்களா ...இந்தா வெத்திலை போடு" என்று பையிலிருந்த வெற்றிலைப்பொட்டணத்தை எடுத்து நீட்டினேன்.

சிறிது நேரத்தில், வெற்றிலை புகையிலையை வாயில் குதப்பியவாறே பேச ஆரம்பித்தான்.

"வவு(சு)ஷு காலத்தே நல்லா பாடு பட்டேனுங்க. க(ட)ழவுள் தண்டியாத் தந்தாருங்க.. இப்பல்லாம் நா' உடலெ அலட்டிக்கிற தில்லேங்க...ரெண்டு கட்டு மரயிருக்குங்க, எனக்கு நாலு ஆளுவ இருக்கானுக," என்றெல்லாம் அடுக்கலானான். அவன் பாஷையில் பாதி புரியவில்லை; இதில், புகையிலைக் குதப்பல் வேறு.

"இரு அப்பா. நாலு ஆளுன்னியே. அவுங்க எப்படி ஒனக்கு ஆளு. கூலி ஆளுங்களா?" என்றேன்.

"இல்லேங்க. எங்கட்டுமரத்திலே போயி அவுங்க மீன் புடிப்பானுவ. அப்ப எனக்கு வீதங் கொடுக்கத் தே'லே? இன்னுங்க, ஒவ்வொத்தனக்கும் அம்பது, அறுபதுன்னு தந்திருக்கேங்க. எங்கிட்டதா' அவுங்க வேலெ சே'னுங்க."

"குடியாவன் சொவந்தைப் பணம் வாங்கிக்கிட்டு ஒரே யசமாங்கிட்ட பயிரிடரானே அதுமாதிரியா? அதிகக் கூலி தந்தாக் கூட வேறெடத்திலே வேலை செய்யப்படாது, அப்படித்தானே?

அடிமை மாதிரிதா", என்றேன் ஈன சுரத்தில்.

"பின்னென்னங்க, எப்படீங்க ஏழைவ' பொழக்கிறது? இன்னம் ஒவ்வொத்த ரிருக்காங்க, ஏராளமா படகு, கட்டுமரம் எல்லா வெச்சிருக்காங்க. அவுக கிட்ட அண்டித்தானேங்க ஏழைவ ஒழைக்கணும்?" என்று சமூகதத்துவம் பேச ஆரம்பித்துவிட்டான்.

"அது போகட்டும் கிழவா, ஒங்கள்ளே நிதம் சகட்டுக்கு என்ன கிடைக்கும்?"

"நிசுஷயமேதுங்க; நாலு ரூவா மீன் புடிச்சா, எனக்கு ஒரு ரூவா தருவானுவ. அதுக்குக் கொறஞ்சா, கள்ளுக்கு எடுத்துக்குவானுக......ஆமா, சாமி, பவ லெல்லா' பாடுபட்டா அதில்லாட்டி சரிப்படாதுங்க" என்று முன்கூட்டியே வாதித்தான்.

"அட, பாவிகளா! இப்படி வீணடிச் சுடரீங்க பணத்தெ; ஒங்க பசங்கள் பீச்சுக்கு வரவங்க கிட்டெல்லாம் பல்லைக் காட்டி பைசா கேக்கரானுவ...... ஆமா, ஒங்க குப்பத்திலே ஏதாச்சி ராப்பள்ளிக்கூடம் உண்டா?"

"அதேங் கேக்கிறீங்க. ஒண்ணு இருக்குதுங்க. ஆனா குப்பத்திலே கட்சிங்க. ஒத்தரு காங்கிக்கொடி நட்டாரு. இன்னொத்தரு சங்கிரக் கொடியைப் போட்டாருங்க. அது போவட்டுங்க. எங்க குடிசையெல்லா' பிரிச்சுடணுங்களாமே, ஏஞ்சாமி?"

"ஆமாப்பா, நெருப்பு புடிச்சுக்கும்னு கீத்துக் குச்சுகளையெல்லாம் பிரிச்சுடணுமாம்; அப்ப நீங்க என்ன பண்ணப் போரீங்க?"

"அதோ தெரியுதுங்களே, இரும்பு வாராவதி அங்கே ஒரு வருசத்துக்கு குச்சு போட்டுட்டிருக்கணுமா. அதுக் குள்ளே இங்கே வேறெ கட்டிக் குடுத்துடுவாங்களாம்" என்றான் வருத்தத்துடன்.

"அது நல்லதுதானே, புது எடத்துக்குப் போனா கொஞ்ச நாளைக்காவது சுத்துப்புறமெல்லாம் சுத்தமாயிருக்கும், அப்பரம் நல்ல புது வீடுகளுக்குக் குடிவாலாம். இல்லையா?"

"ஆமாஞ்சாமி, மீம்புடிக்கிற எங்களுக்கு சுகம் வேறயா? குச்சு பிரிச்சு, மறுகுச்ச போடாது லேசா? அங்கே, வாராதி கிட்டே, உப்புத்தண்ணி, சாக்கடைத் தண்ணி தேங்கின எடம், ஒரு மாதிரி கெட்ட குளிருண்டுங்க. அப்பரம், புது வீடுண்ணீங்க. ஆனா' கொடக்கூலிதரணுங்களே?" என்றான் படபடப்பாய்.

பாவம், கிழவனுக்கு இந்த 'ஏழவு' பேச்சே பிடிக்கவில்லை. அவன் குப்பத்தைப் பார்க்க வேண்டுமென்றேன். இருவரும் பேசாமலே நடந்தோம், குப்பத்தை நோக்கி.

இங்கு, திருவல்லிக்கேணி பீச்சில் இது ஒரு விசேஷம். பீச்சுக்கு சாக்கடைப் பெரு வாய்க்காலைத் தாண்டித்தான் போக வேண்டும்.

இச்சாக்கடைப் பெருநதியின் ஒரு கரை நெடுக சிறுசிறு கீத்துக் குச்சுகள். தரையெல்லாம் ஒரே சகதியும் சேறும். குப்பத்துச் சிறுவர்களுக்கு 'பிளே க்ரௌண்ட்' இச் சாக்கடைச் சரிவுதான். குச்சுகள் மிகச் சிறியனவாதலால், பெண்டிர் பலரும் தெருவிலேயே உட்கார்ந்து வம்பளந்து கொண்டிருந்தனர். இதுதான் வலையர் குப்பம்.

இக் குப்பத்திற்கு ஒரு நீர்க்குழாய். அதைச் சுற்றி அரைமைலுக்கு எங்கும் ஓதம். நீர் பிடிக்க அநேகர் காத்திருந்தனர். ஒருவருக்கு 'சான்ஸ்' வந்தால், அடுக்கடுக்காய் அநேக பானை, கலயங்களில் நீர் எடுத்துக்கொண்டுதான் விடுவர். வெகு நேரம் வெட்டியாகக் காத்திருக்க வேண்டுமாதலால் வீண் வம்பும், குட்டி யுத்தங்களும் சகஜமாய் நடைபெறும்.

இதையெல்லாம் பார்த்துக்கொண்டே குப்பத்தைச் சுற்றிவந்தேன். கிழவனும் பின்னோடுதான் வந்தான். ஆனால் அதிகம் பேசவில்லை ஒருவரும். எதிரேயுள்ள காட்சியைக் காணத்தான் கண்ணாயிரம் வேண்டுமே; காதைச் செவிடு செய்யும் வாய்ச் சண்டைகள்; நாசிக்கும் குறைவில்லாமல் விதவிதமான நாற்றங்கள். இன்னிலையில் பேச்சுக் கிடமேது?

"புது இடத்துக்கு நீங்கள் போனதும் ஒரு நாள் அங்கு வந்து உன்னையும் பார்க்கிறேன்" என்று சொல்லிக் கிழவனிடம் விடைபெற்றுக் கிளம்பினேன்.




## மாமா தாதாவின் மடித்தலைகாணி

[பார்வதி சுப்ரமணியம், மங்களூர்.]

என் பாட்டிக்கு ஆஸ்தமா உபத்ரவம் உண்டு. பனிகாலம் வந்துவிட்டால் அவள் படும் அவஸ்தையைச் சொல்லி முடியாது. இழுப்புக்கு சாந்தியாக தலையை உயரவைத்துப் படுத்தால் கொஞ்சம் சுகமாக இருக்கும். இரவில் இரண்டு தலையணை திண்டு வைத்துக்கொண்டு படுப்பாள்; பகலில் இது முடியாமலிருந்தது.

பாட்டி அவளுக்காக அவ்வளவு நம்பிக்கை இல்லாவிட்டாலும், அவள் ஜீவித்திருந்த அந்தக் காலத்தாருக்கு ஒப்பிக்க வேண்டி கொஞ்சம் மடி விழுப்பு என்று கொந்துவாள். நாங்கள் பேரன் பேத்திகள் யாராவது அவள்மேலே பட்டுவிடாதபடி அதிஜாக்கிரதையாயிருப்பாள். ஆனால் நாங்கள் பிள்ளை வயிற்றுப் பேரக்குழந்தைகள். இதனால் எங்களுக்கு சட்டமே வேறு. ஆனால் அவள் பெண் வயிற்றுப் பேரக் குழந்தைகளிடம் அவள் காண்பிக்கும் அபிமானம் தனி. அவைகள் விழுப்போடு அவள் மேல் வந்து பட்டாலும் அதை கவனியாதவள்போலிருந்துவிடுவாள். பிள்ளை வயிற்றுக் குழந்தைகளாகிய நாங்கள் ஏதாவது விழுப்புப்பட்டிருப்போம் என்ற சந்தேகம் தோன்றினால் கூடப் போதும். நாங்கள் எவ்வளவு ஒதுங்கி யிருந்தாலு போதாது என்றும், நாங்கள் அவள்மேல் பட்டுவிடக்கூடும் என்றும் சொல்லி கொட்டுகிற மழையானாலும் பனியானாலும் பகலானாலும் இரவானாலும் வித்தியாசமின்றி எங்களை நடுமுற்றத்தில் நிறுத்தி ஒரு செம்பு தண்ணியைத் தலையில் கொட்டி விடுவாள்.

அவளுக்கு ஒரு அருமை உடன் பிறந்தாள் உண்டு. அவர் அனேகமாய் எங்கள் குடும்பத்தோடுதான் வசித்து வந்தார். அவர். அரைப் பயித்தியம். ஆனால் தன் சகோதரியிடம் அதிகப்பற்றுள்ளவர். அவரை முறைமைப்படி நாங்கள் மாமா தாதா என்று அழைத்து வந்தோம்.

ஒரு வருஷம் மார்கழி தை மாதத்தில் அதிகப் பனிபெய்தது, அதனால் என் பாட்டிக்கு ஆஸ்த்மா உபத்திரவம் அதிகமாயிற்று. எங்கள் மாமா தாதாவுக்கு எப்பொழுதும் ஏதாவது வாயில் போட்டு அரைத்துக் கொண்டே யிருக்க வேண்டும். பட்டாணி, நிலக்கடலை, கரும்பு, இவைகளின் மேல் அவருக்கு அதிகப் பிரியம். அவர் வீட்டில் இருக்கும் சமயங்களில் குழந்தைகளாகிய எங்களுக்கும் நொறுக்குத் தீனிக்குப் பஞ்சம் கிடையாது. பனி அதிகமாயிருந்த அந்த வருஷத்தில் வழக்கத்துக்கு அதிகமாக கரும்பு வாங்கி மாமா தாதா எங்களை எல்லாம் மாடிக்கு அழைத்துப்போய் ஒரு பந்தயம்



**“நான் இப்பொழுது ஸன்லைட் சோப் உபயோகிக்கிறேன் — அது துணிகளை நன்ருகச் சுத்தம் செய்கிறது.**

என் பக்கத்து வீட்டுக்காரியின் துணிகள் எப்பொழுதும் என் துணிகளைவிட எவ்வளவோ சுத்தமாய் இருந்தன. அவள் ஸன்லைட் சோப் உபயோகிப்பது எனக்குப் பிறகு தெரியவந்தது. ‘ஸன்லைட் சோப் உபயோகிக்க ஆரம்பித்த பிறகுதான் துணிகளைச் சலவை செய்தாற்போல் இருக்கிறது. ஏனென்ருல் சோப்பில் உண்டாகும் நுரைதான் அழுக்கைப் போக்குகிறது. இந்த நுரையை ஸன்லைட் சோப் ஏதேஷ்டமாகக் கொடுக்கிறது’ என்று அவள் கூறினுள்.

நானும் என் துணிகளில் இப்பொழுது ஒரு பெரிய மாறுதலைக் காண்கிறேன். ஸன்லைட் சோப்பின் உதவியால் அவை பளிச்சென்ற வெண்மையுடன் விளங்குகின்றன.”

# ஸன்லைட் சோப்




தூய்மையான தாவர எண்ணெய்களை மட்டும் கொண்டு இந்தியாவில் தயார்செய்யப்படுவது

LEVER BROTHERS (INDIA) LIMITED

S. 14-50 TM

வைத்தார். அதாவது யார் நிறையக் கரும்பு தின்று சக்கையையும் நன்றாகக் கடித்து உமிழ்கிறார்களோ அவர்களுக்கு காலணா இனும் என்று திட்டம் போட்டார். வசனமே "கரும்பு தின்னக் கூலியா" என்பார்கள். நிஜமாகவே கூலியும் கிடைக்கும் என்ற உடன் நாங்கள் சகோதர சகோதரிகள் அத்தான் அம்மாஞ்சிகள் கூடவிளையாட வந்திருந்த சிறுவர்கள் யாவருமாய்ப் போட்டி போட்டு ஒரு கட்டுக் கரும்பையும் சுவைத்து உமிழ்ந்து விட்டோம். யார் அதிகம் சுவைத்திருக்கிறாள் என்பது தெரிய வேண்டுமல்லவா? அதனால் சக்கையை வெளியில் துப்பிவிடாமல் அவரவர்களுக்கு முன்னால் துப்பிக் குவித்திருந்தோம். மாமா தாதாவும் அவைகளைக் கவனித்து எல்லாரும் சந்தோஷமாகும்படி கையில் காசு கொடுத்து எங்களைக் கீழேபோய் விளையாடும்படி அனுப்பி விட்டார்.

பிறகு அவர் அந்தக் கருப்பம் சக்கையை கையால் நன்றாய் பஞ்சு ஆய்வதுபோல் பிரித்து காயவைத்தார். வீட்டில் வைத்தியன் கை பார்க்க உபயோகமாகும்படி ஒரு பழயபட்டு இருந்தது. அதை எடுத்து ஒரு பையாகத்தைத்தார். அதில் மேற்படி கருப்பஞ்சக்கையை அடைத்து ஒரு பெரிய தலையணை செய்தார். அதை தன் சகோதரியிடம் "கொடுத்து அம்மா பனி நாளில் இப்படிக் கஷ்டப்படுகிறாயே மடியாய் பட்டு தலைகாணி தைத்திருக்கிறேன் வைத்துப் படுத்துக் கொள்" என்று சொன்னார்.

எங்கள் பாட்டியும் பனி நாளில் பகலில் மடியாய் தலைக்கு வைத்துப் படுத்துக்கொள்ள பட்டு தலையணை கிடைத்ததில் திருப்தி அடைந்து அதை உபயோகித்துக் கொண்டாள். ஆனால் சற்று விவரம் தெரிந்த என் தமையன் மெள்ள பாட்டியிடம் போய் "பாட்டி, தலைக்கு என்ன வைத்துக் கொண்டு படுத்திருக்கிறாய்" என்று கிண்டினான்.

பாட்டிக்கு ஆஸ்த்மா உபத்ரவம் ஒரு பக்கம், இன்னொரு பக்கம் இவன் வந்து கேழ்க்கவே தன் பட்டுத் தலைகாணியைப் பார்த்து ஆசைப்பட்டுப் பிடுங்கிக்கொள்ள நினைப்பதாய் பயந்து "ஏண்டாப்பா நான்படும் அவஸ்தைக்கு இறங்கி என் உடன் பிறந்தான் மடியாய் ஒரு பட்டுத் தலைகாணி தைத்துக் கொடுத்திருக்கிறான் அதைப் பிடுங்கிக்கொள்ள வேணும் என்று உனக்குக் கண்கள் உறுத்துகிறதோ" என்று எறிந்து விழுந்தாள்.


அதற்கு என் தமையன் அமைதியாக "இல்லே பாட்டி அதுக்குள் என்ன அடைத்துத் தைத்திருக்கிறது தெரியுமோ?" என்று கேட்டான்.

பாட்டி "ஏண்டா கட்டேலே போவாய் எனக்குத் தெரியாதா தலைகாணிக்குள் என்ன அடைப்பார்கள்? பஞ்சுதான் இருக்கும்" என்றாள்.


உடனே என் தமையன் நாங்கள் கூலி பெற்று கரும்பு தின்று துப்பினதையும், மாமா தாதா அதை வீணாக்காமல் வெயிலில் காயப் போட்டு அடைத்துத் தைத்திருப்பதையும் விளக்கினான்.

அதைக்கேட்ட பாட்டி தலையில் அடித்துக்கொண்டு தலகாணியை கொல்லை எருக்குழியில் எறிந்து விட்டு குட்டைக் குளத்தில் தலை முழுகிவிட்டு வீடு வந்து சேர்ந்தாள்.

[கா. சி. வேங்கடரமணி]



## பாடம் 8



முதலை மீன் திமிங்கலம் சுரு
தவளை நண்டு சீல் மீன் நீர்க்கிரி

இவை ஜலத்தில் வசிக்கும் ஜந்துக்களில் சில. மண் தரையிலும், தண்ணீரிலும் வசிக்கும் சில ஜந்துக்களை உன்னால் குறிப்பிடமுடியுமா?

தரையிலிருக்கும் பாம்புக்கும் தண்ணீர்ப்பாம்புக்கும் ஏதாவது வித்தியாசம் உண்டா?

மேற்கண்ட ஜந்துக்கள் ஆற்றிலும், குளத்திலும், கடலிலும் தங்களுக்குத் தேவையான அன்ன ஆகாராதிகளைத் தேடிப்பிடித்துப் பிழைக்கின்றன. இவைகள் ஒவ்வொன்றிற்கும் என்ன ஆகாரங்கள் என்று தெரிந்து கொண்டு விவரமாய்ச் சொல். அவைகளை எப்படித் தேடிப் பிடித்து அடைகிற தென்றும் சொல்லு.

இடது பக்கத்து வரிசைகளில் கண்டவைகள் சுத்த ஜலத்தில் வசிக்கும் ஜந்துக்கள்.

வலது பக்கத்து வரிசைகளில் கண்டவைகள், உப்பு ஜலத்தில் (சமுத்திரத்தில்) வசிக்கும் ஜந்துக்கள்.

இவைகளால் மனித வாழ்விற்கு விளையும் தீமைகளையும்,பயன்களையும் தெளிவாய்க் குறித்து எழுதிக்கொண்டுவா.

உயிரின் ஆரம்பம் தரையிலா, தண்ணீரிலா? மணி, வயலிலும், கடற்கரை மண்ணிலும் பயந்தோடும் நண்டை நீ பார்த்திருக்கிறாயா?

மணலில் நண்டுகள் எவ்வளவு அழகான வளைகளைப் பறிக்கின்றன. நீ அவற்றில் பயப்படாமல் விரலை விட்டுப் பார்த்திருக்கிறாயா?

இல்லை. ஆனால் மணலைக்கொட்டி வளையை மூடுவேன். கொஞ்ச நேரத்திற்குப்பின் நண்டு அதனை துளைத்து விட்டு மறுபடியும் வளையின் வாயைத் திறந்து வைக்கும்.

அலையின் நுரை வளையின் வாயை அலசி, கோலம் போடும்.

# புத்தக விமர்சனம்

Is it Indian? [தொகுத்தவர் — ஸ்ரீ பாபிரீடு, காரியதரிசி, மதராஸ் இண்டஸ்ட்ரீஸ் அஸோஸியேஷன்—விலை ரூ. 1-8-0]

மனித வாழ்வின் அடிப்படையான சமூகப் பொருளாதார விஷயங்களை எவரும் நன்கறிய வேண்டியதவசியம். இதற்குச் சாதனங்களாக அவ்வப்போது சர்க்காரும், மற்ற பொது ஸ்தாபனங்களும் புள்ளி விவரங்கள் திரட்டித் தருவது நாகரீக வாழ்க்கையின் ஒரு முக்கிய அம்சம். இப்படிப் பல திறப்பட்ட புள்ளிக் கோர்வைகளை அலசி ஆராய்ந்து வெளியிடப்படும் புஸ்தகங்கள் பலவுண்டு. அவையுள், இந்திய தேசம், சென்னை மாகாணம், தனித்தனி ஜில்லாக்கள், இவைகளைப்பற்றிய புள்ளி விவரங்களைத் தொகுத்துத் தரும் இந்நூல் முதலாவதாகு மெனலாம். நம் நாட்டின் தொழில்முறை நிலையையும், மேலும் முன்னேறக்கூடிய வகைகளையும் ஆங்காங்கே நன்கு எடுத்துக் காட்டுகிறது இந்நூல். இந் நாட்டின் வெளி வர்த்தகப் போக்கை அலசி, இறக்குமதி ஏற்றுமதி விவரங்களைத் தெளிவு படுத்துகிறது. சுதேசித் தொழிலபிவிருத்தியை நோக்கமாகக் கொண்ட இது தேசாபிமானிகளுக்கு மிகவும் பயன்படும். நம் சென்னை மாகாணத்தைப்பற்றி, கணக்கிடற்கரிய சர்க்கார் வெளியீடுகளைப் புரட்டாமலே, இதிலிருந்து எளிதில் பல விவரங்களை அறியலாம். முக்கியமாகத் தொழி லபிவிருத்தியில் குடிசைக் கைத்தொழில்களில் அதிக கவனம் செலுத்த வேண்டியதை இந்நூல் வற்புறுத்துகிறது. அதற்கான வழிகளையும் ஆங்காங்கே தெரிவித்துப் போவது விசேஷமாகும்.

இப்புள்ளி விவரங்களைத்தவிர ஸ்ரீ. கிரிஸர். டி. விஜய ராகவாச்சாரியார் முதலிய பிரமுகர்களது கட்டுரைகளும் உள்ளன. தேசியத் தொழில் திட்டம், கூட்டுறவும் தொழில்களும், நாம் நாட்டுச் செல்வம், குடிசைக் கைத்தொழில்கள், நம் உலோகச் செல்வம், சென்னை மாகாணத்தின் தொழில்முறை நிலை, இவை போன்ற உபயோகமான கட்டுரைகளை எவரும் படித்தல் அவசியமாகும். தேச முன்னேற்றமே நோக்கமாகக் கொண்ட எவரும் இம் முறையில் விவரங்கள் வெளியிட்டும், அவற்றை நடைமுறைக்குக் கொணர்ந்து மக்களைக் கைதூக்கிவிட்டும், உழைப்பதே சிறந்த தேச சேவையாகும்.

## வரப் பெற்றோம்

ஸௌதாமினீ :—தமிழ் நாடகம். ஆசிரியர். கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரி பி.ஏ, பி.எல். விலை அணா 8. லெனின் பிருந்தாவன ப்ரசுராலய வெளியீடு.

லெனினும் ரஷியப் புரட்சியும் :—ஆசிரியர் : பி. நடராஜன், எம். ஏ. விலை அணா 10.


## நீங்கள் வாசிக்க

| | ரூ. | அ. |
|---|---|---|
| தேசபக்தன் கந்தன் (கா. சி. வேங்கடரமணி) | 1 | 0 |
| கணையாழியின் கனவு / தியாகபூமி } (கல்கி) | 2 | 0 |
| சந்திரிகா (குகப்ரியை) | 0 | 12 |
| மங்கையர்க்கரசியின் காதல் (வ. வே. சு. ஐயர்) | 0 | 12 |
| சந்தனக்காவடி முதலிய கதைகள் (தி. ஜ. ர.) | 0 | 12 |
| கனகாம்பரம் முதலிய கதைகள் (கு. ப. ரா.) | 0 | 12 |
| புதுமைப் பித்தன் கதைகள் | 2 | 0 |
| கம்பன் கவிதை (17 ஆசிரியர்கள் எழுதிய ஆராய்ச்சிக் கட்டுரைகள்) | 1 | 8 |

ஸ்வேதாரண்ய ஆசிரம புத்தகசாலை,
295, லிங்க செட்டி தெரு, மதறாஸ்.